விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 19 திங்கட்கிழமை (05.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ரீம்கோ சீமெந்து

## பொதுமக்கள் மீதான தாக்குதல்களை அறிந்தும் அறியாமலிருந்த உதவி வழங்கும் நாடுகள்

### விக்கிலீக்ஸில் பரபரப்புத் தகவல்

*(கொழும்பு)* வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது படையினர் தாக்கியதை இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளும் அறிந்திருந்தன என்று அண்மையில் கசிந்த விக்கிலீக்ஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. இருந்த போதிலும், தாம் அறிந்தவற்றை பகிரங்கப்படுத்துவதை உதவி வழங்கும் நாடுகள் நிறுத்திக் கொண்டன என்று தமக்கு கிடைத்த விக்கிலீக்ஸ் தகவல்கள் கூறுவதாக பிபிசி தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல் குறித்த விவகாரத்தை தான் இலங்கை ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரான பசில் ராஜபக்ஷவிடம் எழுப்பியதாக கொழும்புக்கான அப்போதைய அமெரிக்க தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக் 2009-ம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி நடந்த சந்திப்பு ஒன்றில் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## நின்றது மின்சாரம் வந்தான் மர்ம மனிதன்

### ஏழாலையில் பதற்றம்

ஏழாலை மத்தியில் நேற்றிரவு மர்ம மனிதனால் பதற்றம் நிலவியது. நேற்றிரவு 9.00 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டது. அச்சமயம் அப்பகுதியிலுள்ள வீடொன்றினுள் மர்ம மனிதன் புகுந்துவிட்டதாக கூக்குரல் எழுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து சகல வீடுகளிலும் சுமார் அரை மணிநேரம் கூக்குரல் சத்தமாக இருந்தது. எனினும் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## மர்ம மனிதர்களை கட்டுப்படுத்த உத்தரவு

யாழ். குடாநாட்டில் மர்ம மனிதன் விவகாரத்தால் அடிக்கடி ஏற்பட்டுவரும் பதற்ற நிலைமைகளைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கு பாதுகாப்புச் செயலாளரால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிறீஸ்மனிதன் அல்லது மர்மமனிதன் வதந்தியால் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## தாள் காசில் விநாயகர்




இந்தோனோசியாவில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நாணயத் தாள் வெளியிடப்பட்டது. 20 ஆயிரம் ரூப்பியா (இந்திய மதிப்பில் 84 ரூபாய்) மதிப்பிலான இந்த நாணயத் தாளில் விநாயகர் உருவம் இருப்பதுதான் அதிசயம். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடான இந்தோனேசியாவில் நாணயத் தாளில் விநாயகர் உருவம் இருப்பது உண்மையிலே வியப்புக்குரியது தானே.

இந்தோனீசியாவின் ஒரு பகுதியான ஜாவா தீவில் பழங்காலத்தில் இருந்த மன்னர்கள் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## மர்ம மனிதர்கள் அட்டகாசம் புத்திஜீவிகள் கூடி ஆராய்வு

### அடையாள உண்ணாவிரதத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் மர்ம மனிதரின் பீதியால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சமயத் துறவிகள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டில் கடந்த 2 வார காலமாக நிலவிவரும் பதற்றமான சூழ்நிலை விரிவாக விவாதிக்கப்பட்டு கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதுடன் மேற்படி முடிபும் எடுக்கப்பட்டது.

மர்ம மனிதர்கள் என்று அழைக்கப்படும் அநாமதேய நபர்களின் நடமாட்டங்கள் மற்றும் நடவடிக்கையினால் பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதன் தொடர் விளைவாக பல்வேறு இடங்களில் மர்ம மனிதர்களை துரத்திப் பிடிப்பதில் ஈடுபட்ட பொதுமக்கள் மோசமாக தாக்கப்பட்டு வருகின்றனர். குடாநாடு முழுவதும் பயப்பிராந்தியின் பிடியில் சிக்கி உள்ளது.

மக்களின் இயல்பு வாழ்வு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாக இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் கருத்துக்களை முன்வைத்தனர். *(19 ஆம் பக்கம் பார்க்க)*

## மீண்டும் ஜி.எஸ்.பி. வாய்ப்பு

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடைநிறுத்தப்பட்ட அமெரிக்க ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீண்டும் இலங்கைக்கு கிடைக்கும் வாய்ப்புள்ளதாக நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்க வர்த்தக நடவடிக்கை திணைக்களத்தின் சர்வதேச வர்த்தக கொள்கை தொடர்பிலான பொருளாதார நிபுணர் மைக்கல் ஓ டொனவன் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தமது இலங்கை விஜயத்தின் போது தொழில்துறை அதிகாரிகள், முதலாளிமார் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த அமெரிக்க பிரதிநிதி, வரிச்சலுகை கிடைப்பதற்காக சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது என குறிப்பிட்டதாக சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவைகள் பணியாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அன்டன் மாகஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் காரியாலயமும் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி அமெரிக்க ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு மீளவும் வழங்குவதற்கு தமது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஊடாக அது இந்த வருடத்தின் மீளமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## யாழ்.-வவுனியா சேவையில் ஈடுபடும் பஸ்ஸின் சாரதி கடத்தப்பட்டு தாக்குதல்

### தப்பிச்சென்ற அவர் பொலிஸால் கைது

வவுனியா-யாழ்ப்பாண பஸ் சேவையில் ஈடுபடும் பஸ் சாரதி ஒருவர் இனந்தெரியாதோரினால் தாக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்டு பின்னர் தப்பிச் சென்றுள்ளார்.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணத்திற்கு புறப்படத் தயாரான நிலையில் இருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைகள் கட்டப்பட்டு தாக்குதலுக்கு இலக்கான அவர் யாழ்.- கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றின் பின்புற பொதி வைக்கும் இடத்தில் அடைக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பெரிய சோமரசங்குளம் வவுனியாவைச் சேர்ந்த சேவியர் கமல்ராஜ் (வயது 27) என்பவரே தாக்கப்பட்டு கடத்தப்பட்டவராவார். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்க தகவல்கள் தெரிவித்துள்ளதாவது,

யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்று நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லமுற்பட்டது. அவ் *(19 ஆம் பக்கம் பார்க்க)*

வெள்ளி முதல் உங்கள் கைகளில்.....
பத்திரிகை வடிவிலும்
கணினிக்களம்
அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கின்றது




தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் முன்னாள் கல்வி அதிகாரிகளின் இணைந்த வழிகாட்டலுடன் வெளிவருகின்றது
- சமகால தொழில் நுட்ப விடயங்கள்
- கணினி கற்கைநெறிக்கான வழிகாட்டல்
- க.பொ.த(சா/த) கணித.விஞ்ஞான மாதிரி வினாத்தாள்கள்

Hotline:077/8688517, 078/4727404, 075/8385895

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சீனா அனுப்பிய ஆயுதங்களுடன் சென்னையில் இலங்கை விமானம்

## கொழும்பு ஊடகம் திடுக்கிடும் தகவல்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் கடந்த 28 ஆம் திகதி அவசரமாகத் தரையிறங்கிய இலங்கை விமானப்படை விமானத்தில் சீன ஆயுத தளபாடங்கள் இருந்ததாக தெரிய வந்துள்ளது.

நடுவானில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக இலங்கை விமானப்படை விமானம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதி கோரியிருந்தது.

இவ்விமானத்தின் நான்கு இயந்திரங்களில் இரண்டு செயலிழந்து போயுள்ளதாக விமானி சென்னை விமானநிலைய அதிகாரிகளுக்கு அவசரத் தகவல் அனுப்பியிருந்த நிலையில், இவ்விமானம் தரையிறங்க அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட அவ் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டது.

இலங்கை படையதிகாரிகள் ஏழு பேருடன் இவ்விமானம் ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் அப்போது தெரிவித்திருந்தனர்.

ஆனால் குறிப்பிட்ட இவ் விமானம் சீனாவில் இருந்து இலங்கை விமானப் படைக்குத் தேவையான ஆயுதத் தளபாடங்களை ஏற்றிக் கொண்டு வந்தது என இலங்கை விமானப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ்32ரகபோக்குவரத்துவிமானம் கொழும்பில் இருந்து டாக்கா சென்று முதலில் எரிபொருள் நிரப்பியது. அதன் பின்னர் சீனாவின் குங்மின் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு சீனாவின் சொங்குயிங் விமான நிலையத்துக்கு அவ் விமானம் சென்றிருந்தது.

இங்கிருந்து சீனாவின் எவ்-7 ஜெட் போர் விமானங்களுக்கான உதிரிப் பாகங்களையும் ஒரு தொகுதி வெடி பொருட்களையும் ஏற்றிக் கொண்டு கொழும்பு செல்லும் போதே சென்னையில் இவ்விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் இலங்கை விமானப்படை விமானத்திற்கு சென்னையில் தரையிறக்க அனுமதி வழங்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தலாம் என்ற காரணத்தினாலேயே அவ் விமானம் கொழும்பில் இருந்து விசாகப்பட்டினம் நோக்கிச் சென்ற போது அவசரமாகத் தரையிறங்கியதாக சென்னை அதிகாரிகள் தகவல் வெளியிட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இதேவேளை இலங்கைப் படையதிகாரிகளுடன் விசாகப்பட்டினம் நோக்கி எதற்காக இவ் விமானம் சென்றது என்பது குறித்த செய்திகள் எதுவும் உடனடியாக வெளிவர வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-8)


A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே 16 ம் திகதி வரை பொறுத்திருங்கள்.
கணினிக் கல்விக்கான மாபெரும் சர்வதேச புலமைப்பரிசில் உங்களுக்காக உள்ளது.
விபரங்களுக்கு 14 , 15 திகதி பத்திரிகைகளை பாருங்கள்.
வீணாக அதி கூடிய கட்டணங்களை கட்டாதீர்கள்!!!
16ம் திகதி வரை பொறுமையோடு காத்திருங்கள். பரிசில்கள் பல !!!


## இராமகிருஷ்ண மிசனின் யாழ்.கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிஷனின் யாழ்.கிளை நாளை மறுதினம் 7ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உரும்பிராய், மானிப்பாய் வீதியில் திறக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா, மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தர், ஸ்ரீமத் சுவாமி மாத்ருகானந்தர் ஆகிய துறவிகளுடன் வேறு பல துறவிகளும் கலந்துகொள்கின்றனர்.

பூஜை, பஜனை, விசேடயாகம், பேச்சு, மங்களராத்தி போன்றன இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

மேலும் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஞாயிறு அறநெறிப் பாடசாலை ஆரம்பமாகின்றது.

இங்கு இராமகிருஷ்ண மிஷன் புத்தக வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென கொக்குவில் தாவடி இராமகிருஷ்ண சமிதி செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-8)

## விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் கிருஷ்ணன் கோயிலடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த க.காந்தன் (வயது-19) என்பவரே படுகாயமடைந்தவராவார். (எ-4)


## தொழிற் பயிற்சிகள்

சுயமாக வேலை வாய்ப்பை பெறுவதற்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் நுட்பத்துறையில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கும் ஏற்ற முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

01. Mobile Phone Repairing
(Software, Hardware Repairing) காலம் : 3 மாதம்

02. ரெலிவிசன் DVD Repairing
TV, Monitor, DVD, Receiver, Power, LCD TV திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம் : 10 மாதம்

03. ஏயர்கொண்டிசனிங்
சகல ஏயர்கொண்டிசன்கள் திருத்துதல், சேவிஸ் செய்தல், பொருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம் : 6 மாதம்

04. எலக்ரிக்கல் வயறிங்
Single phase, Three phase மின்சுற்றுக்கள் பயிற்சியளிக்கப்படும். காலம் : 3 மாதம்

05. றீவைண்டிங்
மின்மோட்டர், ரான்ஸ்போமர், வேறுமின்சார பொருட்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம் : 6 மாதம்

06. Plumping காலம் : 3 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம் : 09.09.2011 வெள்ளி, 10.09.2011 சனி

Sinhala Class
சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
ஆசிரியர் : J.R.சூரி வகுப்புக்கள் ஆரம்பம் 10.09.2011

மேலதிக விபரங்களிற்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P :- 0718561654
கிளை NEW ASIAN CENTER 56/15 B ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கியருகாமை) யாழ்ப்பாணம். T.P :- 0779254078
(6059)
குறிப்பு : வெளிமாவட்ட மாணவர்களிற்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.



கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் திருத்தமா?
உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்!
அழையுங்கள் 0777483840

Computer Repair


## நகர சபை சாவகச்சேரி
## டெங்கு ஒழிப்பு அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாக பரவிவருவதால் அதனைத்தடுக்கும் பொருட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுளம்பு பெருகக் கூடிய அனைத்து பற்றைக் காணிகளும் பராமரிப்பற்ற ஆதனங்களும் இவ்வறிவித்தல் வெளியான திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் துப்புரவு செய்யப்பட வேண்டும் என ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் நகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினரால் துப்புரவு செய்யப்படுவதோடு, அதற்கான செலவினத்துடன் தண்டப்பணத்தையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்காத ஆதன உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் மீது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து நுளம்பு பெருக்கத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

டெங்கு அபாயம் அற்ற சுற்றாடலை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்.

05.09.2011

இ.தேவசகாயம்பிள்ளை
தலைவர், நகர சபை சாவகச்சேரி

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறுவகை முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்திகளையுடையோர் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும் கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சட்டவள நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கற்கைநெறி யாழ்.பிராந்திய நிலையத்திற்கு மேலதிகமாக கிளிநொச்சியில் ஸ்தாபிக்கப்படவுள்ள கற்கை நிலையத்திலும் நடைபெறவுள்ளதென யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * *

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத் தினால் முன்பள்ளி சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்திகளையுடையோர் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும் கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சட்டவள நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இக்கற்கைநெறி யாழ்.பிராந்திய நிலையத்திற்கு மேலதிகமாக கிளிநொச்சியில் ஸ்தாபிக்கப்படவுள்ள கற்கை நிலையத்திலும் நடைபெறவுள்ளதென யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


ஸ்ரீ சாயி பாபா சோதிடம்

சூரியன், சந்திரன், நவக்கிரகம், மகிமைகள், பெயர், ராசி, கைரேகை, குறிப்பு, முத்துக்கள் மூலம் நல்ல முறையில், இன்பம்-துன்பம், குடும்பம், உத்தியோகம், வெளிநாடு, லட்சுமிகரம், குழந்தை பாக்கியம், காதல், சகல காரியமும் தீர்வதற்கு, லண்டன், சிங்கப்பூர் மலேசியாவில் புகழ்பெற்ற சாயிராம் குருக்களின் சிஷ்யன்.

ராம்தேவ் சுவாமியை
உடனே சந்தித்துப் பாருங்கள் T.P:- 0779755542
காலை 7.00 மணி பி.ப. 6.00 மணி வரை
இல.63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்)
(6064)



மனோதத்துவ வைத்தியம்
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்
T.P.: 0719315664 , 0777569205
மீண்டும் யாழில்
05.09.2011 முதல் 10.09.2011 வரை 6 நாட்கள் மட்டுமே ...
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் நூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்),
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
(C-4297)

# இன்று ஒரு தகவல்

## இலையுதிர் காலம்

ஒரு ஊரிலே ஜென் குரு என்றொருவர் இருந்தார்.

அவரைச் சந்திப்பதற்காக ஜப்பான் மன்னர் ஒருவர் வந்தார்.

அவர் தோட்டக் கலையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அங்கு வந்தார்.

எப்படித் தோட்டம் அமைப்பது பற்றி குரு விபரமாகச் சொல்லிக்கொடுத்தார். ஒருநாள் இரண்டு நாள் இல்லை... மூன்று வருடங்கள் வரை கற்றுக் கொடுத்தார்.

அதன்பின் குரு சொன்னார் "நான் தோட்டம் அமைப்பது பற்றிக் கற்றுக்கொடுத்துவிட்டேன். இன்றிலிருந்து நீங்கள் போய் தோட்டம் அமைக்கலாம். அதுதான் உங்களுக்குப் பரீட்சை. அமைத்த பின் வந்து பார்க்கிறேன். நீங்கள் இங்கே எவற்றையெல்லாம் கற்றுக் கொண்டீர்களோ அதையெல்லாம் அங்கே செயல்முறையிலே செய்து காட்டுங்கள்'' என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

மன்னர் சென்று அரண்மனைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய தோட்டம் அமைத்தார். அதில் அழகான மரங்களையும் செடிகளையும் உருவாக்கினார்.

தோட்டத்திற்கு ஆயிரம் தோட்டக்காரர்களை வேலையில் ஈடுபடுத்தி மூன்று வருடங்கள் முயற்சி செய்து அழகான தோட்டத்தை உருவாக்கினார்.

சில நாட்கள் செல்ல "நாளை வந்து தோட்டத்தை பார்க்கப் போகிறேன்'' என்ற செய்தி குருவிடமிருந்து வந்தது.

மன்னர் சுறுசுறுப்பானார். முதல்நாளே தோட்டத்தைச் சுத்தப்படுத்தினார். இரவு பூராகவும் எவரும் தூங்கவில்லை. எல்லோரும் தோட்டத்தில் அது அது அந்தந்த இடத்தில் ஒழுங்காக இருக்கிறதா என்று சரி பார்த்தார்கள். ஒரு தவறும் இல்லாதவாறு ஒழுங்குபடுத்தினார்கள்.

மறுநாள் குரு வந்தார். தோட்டத்தைப் பார்த்தார். அவருக்கு கோபம் வந்தது. மன்னருக்கு ஆச்சரியம்... "எப்போதும் சிரிக்கிறவர் இப்போது ஏன் இப்படி இருக்கிறார்?'' என்று ஆச்சரியம்.

மெதுவாக குருவிடம் சென்று, ''எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது?'' என்றார்.

"எல்லாம் சரிதான். ஆனாலும் எங்கே அந்தப் பொன்னிறக் காற்று?'' என்றார்.

"உதிர்ந்த இலைகள்... பொன் மஞ்சள் நிற இலைகள்... காற்றில் புரண்டோடுவதை நான் பார்க்கவில்லை'' என்றார்.

அது மட்டுமன்றி, ''இந்தத் தோட்டம் உயிரோட்டமுள்ளதாக இல்லை... பாடல் இல்லை... ஆடல் இல்லை... அதெல்லாம் இல்லாமல் மிகவும் செயற்கையாகத் தெரிகிறது'' என்றார்.

மன்னர் இப்போதுதான் யோசித்தார்...

கீழே கிடந்த காய்ந்துபோன இலைகள் மட்டுமல்ல... மரத்தில் இருந்த காய்ந்துபோன இலைகளையும் வெளியேற்றி சுத்தமாக வைத்திருந்தார்.

இறப்பும் வாழ்வின் ஒரு பகுதிதான். மரணம் என்பது வாழ்க்கைக்கு எதிரானது அல்ல. அதை நிரப்பும் ஒரு பகுதிதான் அது. மரணம் இல்லையேல் வாழ்க்கையே இல்லை.

குரு ஒரு வாளியைக் கையில் எடுத்து தோட்டத்திற்கு வெளியே சென்றார். ஏற்கனவே வீசியெறிந்த சருகுகளையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்தார். தோட்டத்தில் வீசினார். உடனே காற்று அந்த காய்ந்த சருகுகளையும் பழுத்த இலைகளையும் அசைக்க ஆரம்பித்தது.

இப்போது அங்கே... சலசலப்பு சத்தம்... சங்கீதம்... இலைகளின் நடனம்...

ஓவியம் மாதிரி இருந்த அந்தத் தோட்டம் இப்போது உயிர் பெற்றது.

இதுதான் அந்தப் "பொன்னான காற்று'' என்றார் குரு.

பொன்னான காற்று என்பதற்கான விளக்கம் என்னவெனில், உன்னுடைய எண்ணங்கள் எல்லாம் உன் மனதிலிருந்து கீழே விழுந்து, உனது உள்ளுணர்வானது மொட்டையாக நிற்கும் நிலைதான். அது உனது வேர்களின் அருகில் காற்று வீசுகிறது. எல்லா எண்ணங்களும் உன்னிலிருந்து வெகு தூரத்துக்குப் புரண்டு கொண்டே சென்று விடுகிறது. நீ அவற்றைக் கடந்து விட்டால் நீ அவைகளுக்கெல்லாம் மேலெழுந்து கீழே பார்ப்பவனைப் போல நிற்க ஆரம்பித்து விடுவாய். அதுதான் தியானம்.

தியானம் என்பது எண்ணத்திற்கு எதிரானது அல்ல. தியானம் என்பது எண்ணங்களைக் கடந்து செல்வதுதான். அதன் பின்னர் நாம் பொன்னிறக் காற்றில் ஆட ஆரம்பித்து விடுவோம்'' என்றார் ஓஷோ.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணி உரித்துடைய புலம்பெயர்ந்தவர்களுக்கு புதிய விண்ணப்பப்படிவம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் காணி உரித்துடைய புலம்பெயர்ந்தவர்கள் தமது காணிகளை உறுதிப்படுத்தி கொள்வதற்கான புதிய விண்ணப்பப்படிவம் ஒன்றை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த விண்ணப்பப்படிவம் இன்று வெளியிடப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் காணிகளை உரிமைப்படுத்தவும் நாட்டிற்கான காணிப் பலத்தை ஸ்திரப்படுத்தவும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் பிம்சவிய என்ற பெயரில் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் அளக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு- கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளை அளப்பதற்காக அவர்களுக்காக புதிய விண்ணப்பப்படிவம் ஒன்று அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

அதனூடாக அவர்கள் தங்களுடைய காணிகளை அளப்பதற்கும் எல்லையை நிர்ணயித்துக் கொள்ளவும் முடியும். அந்த விண்ணப்பத்திற்கான விபரத்தை அவர்கள் இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

அந்தப் புதிய விண்ணப்பம் இன்று வெளியிடப்படும். அந்த விண்ணப்பத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு எதிராக ஆட்சேபனைக் காலமாக இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்படும்.

காணிகள் அளக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கும் நடவடிக்கையின் முதற் கட்டப்பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இதனை முழுமையாக செய்து முடிக்க நீண்டகாலம் தேவைப்படுகின்றது என்றார்.

இந்த வேலைத்திட்டமானது 1998 ஆம் ஆண்டின் உறுதிப் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2007 முதல் ஒரு தேசிய நிகழ்ச்சித் திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் காணிகள் அளக்கப்பட்டும் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டும் உறுதிப்படுத்தப்பட்டும் இலவசமாக உறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டும் வருகின்றது.

குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் இப்பணியைச் செய்து முடிப்பதே பிரதான இலக்கு என காணிமற்றும்காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, புலம்பெயர்ந்தவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விண்ணப்பம் தொடர்பான விபரத்தை WWW. bimsaviya. gov.lk இன் ஊடாக விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 95 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 |
| தக்காளி | 30 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 50 |
| கோவா | 30 | 60 |
| கரட் | 50 | 80 |
| பூசணி | 25 | 25 |
| புடோல் | 30 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 80 |
| பயற்றங்காய் | 90 | 100 |
| லீக்ஸ் | 50 | 60 |
| பீற்றூட் | 15 | 30 |
| கறிமிளகாய் | 70 | 70 |
| முருங்கைக்காய் | 90 | 100 |
| போஞ்சி | -- | 90 |
| கத்தரிதம்புள்ள | 70 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 30 |
| தேசிக்காய் | 170 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# இராசி பலன்

05.09.2011
(ஆவணி 19, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அட்டமி பிற்பகல் 3.39 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.57 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
அட்டமி- நவமி

**மேடம்** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபடவேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கூடிய கவனம் எடுக்கவேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும், மாற்றினத்தவர்களின ஒத்துழைப்போடு வீட்டுப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள், கடனில் ஒரு பகுதியைக் கொடுத்துத் தீர்க்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பிள்ளைகளால் சிறு வருமானங்கள் கிடைக்கலாம்.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறக்கமுடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம், பெண்கள் வழியில் பெருமையான உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சுவாரஸ்யமான நாள், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**துலாம்** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், பெரியமனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் வளர்ச்சியேற்படும், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், அஞ்சல் வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள், கோபத்தைக் குறைப்பது நல்லது, சயன சுகக்குறைவுண்டு, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.

**மகரம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், உத்தியோக உயர்வுண்டு, உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், ஆரோக்கியமான நாள்

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்** தடைகள் விலகி தனவரவு பெருகும்நாள், தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

வளவன்

## விவசாயக் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இயற்கையுடன் இணைந்த நிலை பேறான விவசாயத்தை நோக்கி எனும் தொனிப் பொருளிலான விவசாயக்கண்காட்சி இன்று முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் அதனுடன் இணைந்த வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கண்காட்சி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலிற்கமைய வடமாகாண ஆளுநர் ஜி.எ.சந்திரசிறியின் பணிப்பிற்கமைய நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா இன்று காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஸ்ரீ-12)




## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை வீதி அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ்வுற்சவ காலங்களில் மாலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப் பேருரையாற்றவுள்ளார். (ஸ்ரீ)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் முல்லைத்தீவு-உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த எஸ்.லோகேஸ்வரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த நபர் யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது சாவகச்சேரிப் பகுதியில் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# ஆலடிப் பகுதியில் மர்மமனிதர்களை துரத்திய மூவருக்கு விளக்கமறியல்

(உடுவில்)

உடுவில் ஆலடிப் பகுதியில் மர்ம மனிதனை துரத்திய பொதுமக்கள் மூவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் ஆலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கிறிஸ் மனிதன் பீதியையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

அப்பகுதியிலுள்ள வீடொன்றினுள் மர்ம மனிதர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் புகுந்ததையடுத்து இந்த பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் மக்களை விரட்டியதுடன் மூவரை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எல்.மல்கம் தெரிவித்தார்.

அத்தோடு கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெற்கு முதலி கோவிலடிப் பகுதியிலுள்ள மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு முதலிய கோவில் வீதி, இன்பச்சோலை வீதி, பொத்தத்துறை இந்து மயான வீதி, என்பனவும் பல வருடகாலமாக திருத்தப்படாத நிலையில் உள்ளன.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ-12)

# கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையில் இதுவரை 1153 பிணக்குகள் பதிவு

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையில் இதுவரையில் ஆயிரத்து 153 பிணக்குகள் பதிவாகியுள்ளதாக கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

இதில் மத்தியஸ்த சபைக்குட்பட்ட பிணக்குகள் கூடுதலாக கலந்துரையாடப்படுகின்றது.

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறும் மத்தியஸ்த சபை கலந்துரையாடல்களில் 40 இற்கு மேற்பட்ட பிணக்குகள் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதுவரையில் 827 பிணக்குகள் சமரசமான முறையில் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் 150 பிணக்குகள் தீர்க்கப்படாத நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இம் மத்தியஸ்த சபை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 2 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12-134)

# சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாக பரவி வருவதால் அதனை தடுக்கும் பொருட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட நுளம்பு பெருகக்கூடிய அனைத்து பராமரிப்பற்ற பற்றை காணிகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னராக துப்புரவு செய்ய வேண்டுமென காணி உரிமையாளர்களை அல்லது பராமரிப்பாளர்களை நகரசபை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாத காணிகள் நகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினரால் துப்புரவு செய்யப்படுவதோடு அதற்கான செலவுத் தொகையுடன் தண்டப்பணத்தையும் காணி உரிமையாளர்கள் செலுத்தநேரிடுமென்றும் அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடன் இணைந்து நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படுமென்றும் சாவகச் சேரி நகர சபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-12-29)

## சகல பாடசாலைகளும் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் 3 ஆம் தவணைக்காக இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் யாழ். மத்திய கல்லூரி மட்டும் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதென யாழ்.வலய பதில் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12)

## முகாமையாளர்கள் இடமாற்றம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பருத்தித்துறை மக்கள் வங்கிக்கும் பருத்தித்துறை கிளை முகாமையாளர் மு.சிவநேசன் பிராந்திய அலுவலகத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி கிளையில் பிரதிமுகாமையாளராக கடமையாற்றிய திருமதி.றொசட் மெலானி தவநாயகம் வல்வெட்டித்துறை முகாமையாளராக பொறுப்பேற்கிறார். இம்மாற்றங்கள் இன்று முதல் அமுலுக்கு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-12)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு அளவாவேரடைப் பதி சிவஞான கருணாகரப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.15 மணி தொடக்கம் 6.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும். (ஸ்ரீ-12)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று காலை 10 மணிக்கு செல்லும் பொருளும் செல்லாப் பொருளும் எனும் தலைப்பில் இரா.கேதீசன், நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முருக வழிபாட்டின் தொன்மை எனும் தலைப்பில் சைவப் புலவர் க.நித்தியதசீதரன், நாளை மறுதினம் காலை 10 மணிக்கு காவிக் கமல கழமுடன் சேர்த்தருள்வாய் எனும் தலைப்பில் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் ஆகியோர் சொற்பொழி வாற்றவுள்ளனர். (ஸ்ரீ-12-35)



வலிகாமம் கல்வி வலயத்தினால் முன்னெடுக்கப்படும் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலொன்று இராமநாதன் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. இதில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராஜேந்திரன் உரையாற்றுவதையும் மற்றும் உயர் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் மற்றும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் செய்மதி தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒளிபரப்புச் செய்யும் நபர்களுக்கு எதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டவிரோதமான முறையில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட செய்மதித் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த 30 தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் வீடுகளில் நேரடியாக செய்மதித் தொலைக்காட்சி இணைப்புக்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் செய்மதி தொலைக்காட்சி அன்டனாக்கள் தொலைத்தொடர்பு அதிகாரசபையின் அனுமதியின்றி நாட்டுக்குள் கொண்டுவர முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்படாத போதிலும் அனுமதியின்றி அன்டனாக்களைக் கொண்டுவர முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிநாட்டுப் பயணத்தை கைவிட்டு கொழும்பு திரும்புகிறார் பீரிஸ்

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு வரத் திட்டமிட்டுள்ளதால் தனது ஜெனீவா பயணத் திட்டங்களை கைவிட்டு வெளிவிவகார அமைச்சு ஜி.எல்.பீரிஸ் அவசரமாக கொழும்பு திரும்பவுள்ளார்.

சிங்கப்பூர், தென்கொரியா, பிரித்தானியா, சேர்பியா உள்ளிட்ட நாடுகளுக்கான பயணத்தின் முடிவில் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவரது பயணத் திட்டம் பிளேக்கின் வருகையால் குழம்பிப் போயுள்ளது.

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பு வருவதால் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஜெனீவா பயணத்தை பாதியில் நிறுத்தி விட்டு கொழும்பு திரும்பவுள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஜெனீவா செல்லும் அவர் அன்றைய நாள் மட்டுமே அங்கு தங்கியிருப்பார். (ஸ்ரீ-2)

# எரிசக்தி முகாமைத்துவம் தொடர்பாக சர்வதேச தரச் சான்றிதழ்கள்

(கொழும்பு)

எரிசக்தி முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையின் நிறுவனங்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கு இலங்கை தர நிர்ணய நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஐ.எஸ்.ஓ.50001 என்ற இந்தத் தரச் சான்றிதழ் சர்வதேச நாடுகளில் எரிசக்தி முகாமைத்துவத்திற்காக வழங்கப்படுவதாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி லலித் செனவீர கூறியுள்ளார்.

இலங்கையில் நிலை பெறுதகு சக்தி அதிகார சபையுடன் இணைந்து இலங்கையின் நிறுவனங்களுக்கு இந்த தரச் சான்றிதழை பெற்றுக் கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 85 பேர் வவுனியாவில் கைது

இலங்கை மின்சார சபையினால் கடந்த நான்கு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இவர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இவர்களிடம் இருந்து சுமார் ஒரு கோடியே 26 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணம் பெறப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழேயே இந்த பணத்தை அறவிடும் படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறு சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களில் மின்சார சபையின் ஊழியர்கள், மருத்துவர்கள் மற்றும் வர்த்தகர்களும் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மின்சார கட்டண அறவீடு தொடர்பில் புதிய நடைமுறை

(கொழும்பு)

மின்சார கட்டணங்கள் புதிய கட்டமைப்பின் கீழ் மாற்றம் செய்யப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மின்சார பாவனையின் தன்மைக்கமைய நுகர்வோரிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்படும் என தெரியவருகிறது.

இலங்கை மின்சார சபைக்கு தற்போதைய நிலையில் நாளாந்தம் 15 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் புதிய கட்டண அறவீடு மூலம் இந்த நட்டத்தினை மட்டுப்படுத்தலாம் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


க.பொ.த உயர்தர மாணவர் மற்றும் பெற்றோருக்கான கலந்துரையாடல்

NIBM open day

- ✓ உயர் கல்வி சம்பந்தமான ஆலோசனைகள்
- ✓ விரிவுரையாளர்களுடனான சந்திப்பு
- ✓ இலவச கணினி கருத்தரங்கு - காலை 10.00 மணி
- ✓ அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள் பற்றிய விளக்கம்

இடம் : NIBM யாழ் பிராந்திய நிலையம்
(யாழ் இந்து கல்லூரி மைதானம் (முன்பாக)

அனுமதி இலவசம்

காலம் : 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

077 0716974 , 021 222 0360

NIBM
BUILDING COMPETENCIES

# சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக இலங்கை-இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்து

போர் காரணமாக இடம் பெயர்ந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சம்பூரில் மீள்குடியேற்றப்படாதுள்ள நிலையில் சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நாளை செவ்வாய்க்கிழமை உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது மீள் குடியேற்றம் தொடர்பாக தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தங்கள் காரணமாக அரசு அவர்களை தமது கிராமங்களில் குடியேற்றுவதற்காக கூறி அழைத்துச் சென்று அவர்களது கிராமங்களில் இருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் தற்காலிக முகாம் அமைத்து தங்க வைத்துள்ளது.

மறுபுறத்தில் மூதூர் மற்றும் சம்பூர் பிரதேசங்களைச் சேர்ந்த பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரித்துக் கொண்டுள்ளது. இப் பகுதிகளில் அமைந் திருந்த பொதுமக்களுடைய வீடுகள், வைத்தியசாலைகள், பொதுக் கட்டடங்கள் என அனைத்தும் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. பாடசாலை ஒன்று கடற்படைப் பயிற்சி முகமாக மாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை ஒவ்வொரு நபரும் தனது இருப்பிடத்திற்குத் திரும்ப வேண்டும் என்று சொல்லி வந்த இந்தியா தனது கூற்றுக்கு முரணாகச் செயற்படுவது தவறானது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை, இந்திய அரசுகள் சம்பூர் தொடர்பாக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்னர் அம்மக்களை அப்பகுதிகளில் மீள் குடியேற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

போரின் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் அனைவரும் மீள் குடியேற்றப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர், இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர், இந்தியத் தூதுக் குழுவினர் என அனைவரும் வலியுறுத்திக் கூறிவருகிற அதேவேளை மறுபுறத்தில் அவை எதுவும் நடைபெறமுதலே சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில் இந்தியா அவசரமும் காட்டி வருவது அதன் போலி முகத்தை அம்பலப்படுத்துகிறது என பெயர் குறிப்பிட விரும்பாத அவதானி ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சீமெந்து பிரச்சினைக்கு இலங்கை தரநிர்ணய நிறுவனமே பொறுப்பு

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

சீமெந்து பிரச்சினைக்கு முழுமையான பொறுப்பை இலங்கை தர நிர்ணய நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு நிறுவனத்திடமிருந்து சீமெந்து இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டால் அதன் பின்னர் கையாள வேண்டி நடைமுறையொன்று உள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடைமுறைக்கு மாறாக தர நிர்ணய நிறுவனம் செயற்பட்டமையே இந்தப் பிரச்சினைக்கான காரணம் எனவும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

எஸ்.எல்.எஸ் நிறுவனத்தினால் ஒரு நிறுவனத்திற்கு தடை விதிக்கப்படுமாயின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த பொறுப்பை நிறைவேற்ற இலங்கை தர நிர்ணய நிறுவனம் தவறியதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துள்ள தெனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தரச் சான்றிதழ் வழங்கப்படாத சீமெந்து விற்பனை செய்யப்பட்ட விடயத்தில் கூட்டுறவு சபை தவறிழைக்கவில்லை என குறிப்பிட்ட அமைச்சர் சீமெந்து விற்பனை செய்த நிறுவனத்திற்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஊரணி தாக்குதல் தொடர்பில் 6 பேர் கைது

மட்டக்களப்பு ஊரணி பொலிஸ் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மையையடுத்து பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் நடத்தி சேதம் விளைவித்திருந்ததாக குறித்த குழுவினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தனியார் பல்கலைக்கழகத்திற்கு வைத்திய பட்டம் வழங்கும் அதிகாரம்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு

மாலம்பேயிலுள்ள தனியார் மருத்துவ கல்லூரிக்கு வைத்திய பட்டம் வழங்குவதற்கான சட்ட அனுமதி வழங்கப்பட்டமை இலவச கல்விக்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டாரநாயக்க இது தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

தனியார் பல்கலைக்கழகத்திற்கு வைத்திய பட்டம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டதால் நாட்டிலுள்ள மருத்துவ கல்லூரிகளுக்கும் வைத்திய தொழிலிற்கும் இழிவு ஏற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தினார்.

தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்து மக்களின் வாகனங்கள் பழுதடைந்தால் அவற்றை திருத்திக் கொள்ள முடியும் என தெரிவித்த அவர் தரம் குறைந்த வைத்தியர்களை உருவாக்கி நாட்டின் சுகாதாரத்துறைக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை எவரேனும் ஏற்றுக்கொள்ள முன்வருவார்களா என கேள்வி எழுப்பினர்.

வறிய மாணவர்கள் மருத்துவ பட்டத்தை பெறுவதற்கு மூன்று அதியுயர் சித்திகள் கோரப்படுகின்ற போது செல்வந்த மாணவர்களிடம் மூன்று சாதாரண சித்திகள் கோரப்படுமாயின் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வடக்கின் வசந்தத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 வீதிகள் புனரமைப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 கிராமிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

கரைத்துறைபற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 50 கிலோமீற்றர் நீளமான வீதி இதற்கமைய புனரமைக்கப்படவுள்ளது.

பரந்தன் -பூநகரி வீதியும் மாங்குளம்- வெள்ளாங்குளம் ,வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கணக்காய்வாளர் நாயகத்திற்குரிய முல்லைத்தீவு மாவட்ட உப அலுவலகம்புதிதாக 5.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது . (ஸ்ரீ-2)

# காசநோயாளர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனைகள்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

காசநோய் வெகுவாகப் பரவக் கூடிய தரப்பினரை இனங்கண்டு உரிய மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் காசநோயால் பீடிக்கப்பட்ட சுமார் ஏழாயிரம் பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசநோய் தொடர்பான மருத்துவ பரிசோதனைகளை மேற் கொள்வதற்கான வசதி நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக காசநோய் மற்றும் மார்பக நோய் ஒழிப்பு தேசிய திட்டத்தின் வைத்திய நிபுணர் சுனில் டி சில்வா கூறியுள்ளார்.

ஆறுமாதங்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலம் காசநோயை முற்றாக குணமாக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக நகரப் பகுதிகளில் வாழ்வோர், சிறைக்கைதிகள், சுத்திகரிப்பு பணியாளர் ஆகியோரே காசநோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இதனைத் தவிர நீண்டகாலம் வெளிநாடுகளில் தங்கியிருந்து நாடு திரும்புவோர் மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக வருகை தந்துள்ள வெளி நாட்டு பணியாளர்கள் ஆகியோரையும் காசநோயில் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வைத்திய நிபுணர் சுனில் டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


நீங்களும் ஓர் கணணிக்கு உரிமையாளராக?

அதிரடி விலைக்கழிவில்...

| SDSCOM - I | SDSCOM - II | SDSCOM - III |
|---|---|---|
| Processor Intel Dual Core 3.2 | Processor Intel Dual Core 3.2 | Processor Intel i3 3.06 |
| Mother Board-Biostar G41 | Mother Board - Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston |
| HDD 250GB Samsung | HDD 500GB Samsung | HDD 500GB Samsung |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX |
| DVD Writer | DVD Writer | DVD Writer |
| Monitor LCD 16” Viewsonic | Monitor LED 16” Viewsonic | Monitor LCD 18.5” Dell |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad |
| M/M HI-FI Stero Speaker | M/M-HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker |
| USB Keyboard 104 Keys | Web Camera/ Headphone with mic | USB Keyboard 104 Keys |
| | PS/2 Keyboard 107 Keys | Web Camera/Headphone with mic |
| | | UPS 650VA |
| Price :- Rs. 33,400/= | Price :- Rs.35,500/= | Price :- Rs.48,900/= |
| Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original |

★ 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்! ★ கையிருப்பில் உள்ளவரை மட்டுமே....

**Our Services**

*Sales, Repair & maintenance, Software Developments and all type of printing etc.*

**Authorized Dealer for..**

Hp, Dell Products
Biostar Mother Boards
T P Link Products
Viewsonis Products
Havit Products
East UPS

வரவேற்கின்றோம்! மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான கணணி, கணணி சார் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தேவைகளுக்கும் நாடுங்கள்....

SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்....
T/P:- 021-5100105,0777-874705 , Fax :- 021222-4500

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள் உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்." போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.




### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமட்ங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

# சிலதரப்பினர் தொடர்ந்தும் பயங்கரவாதத்துக்கு ஆதரவு

## திசர சமரசிங்க தெரிவிப்பு



சில தரப்பினர் தொடர்ந்தும் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சனல் 4 காணொளி அவுஸ்திரேலியாவில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட போது இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பாதகமான விளைவுகள் ஏற்படுவதனை தடுக்க முடிந்தது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு பிரவேசிக்கும் இலங்கையர்களை தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலியா பாராட்டியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலியாவுடன் சகல வழிகளிலும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி எடுக்கப்படும் எனவும் தாம் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் முரண்பாடுகள் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய அரசாங்கம் சாதகமான முறையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமை தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கமும் மக்களும் மகிழ்ச்சியடைவதாகவும் இலங்கை தொடர்பில் அவுஸ்திரேலியாவில் சாதகமான நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுதந்திரக்கட்சி பெயரளவில் மட்டுமே காணப்படுகிறது

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

60 ஆவது வருட பூர்த்தியைக் கொண்டாடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்றிறனற்றுக் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

கண்டி திகன பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட தமது கட்சி ஐந்து வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டது என சுட்டிக்காட்டினார்.

அரசியல் கட்சி என்ற வகையில் 60 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் 1970 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தேர்தலில் போட்டியிடவில்லை எனவும் அந்தக் கட்சி பெயரளவில் மாத்திரம் காணப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1970 ஆம் ஆண்டிற்கு பின்னர் அந்தக் கட்சி தேர்தலில் போட்டியிடவில்லை எனவும் கூட்டமைப்பை அமைத்ததன் மூலம் அந்த கட்சியால் ஆட்சியை கைப்பற்ற முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுமி துஷ்பிரயோகம் தொடர்பாக முன்னாள் விமானப்படை உறுப்பினர் கைது

(கொழும்பு)

மாத்தறை கல்வி வலயத்தில் பரீட்சை தொடர்பாடல் மத்திய நிலையமாக பயன்படுத்தப்பட்ட பாடசாலை வளாகமொன்றில் சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் விமானப்படை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் நண்பரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

தமது தாயாருடன் பாடசாலை வந்திருந்த சிறுமியே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# காணாமல் போதல் சம்பவங்கள் குறித்த ஐ.நா பிரகடனத்தில் கையெழுத்திட இலங்கைக்கு அழைப்பு

(கொழும்பு)

பலவந்தமான அல்லது சட்டவிரோதமான முறையில் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கைச்சாத்திடுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு மீளவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பலவந்தமான அல்லது சுயவிருப்பற்ற காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு இந்த அழைப்பை விடுத்துள்ளது.

இலங்கையின் சில பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கு அனுமதி அளிக்குமாறும் குறித்த செயற்குழு கோரிக்கை விடுத்துள்ளது. எனினும் இந்த கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் இதுவரையில் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி, கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி, 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஆகிய திகதிகளில் குறித்த அமைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

பலவந்தமான காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் இலங்கையில் நடவடிக்கை எடுப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

பிரகடனத்தை இலங்கையில் அமுல்படுத்துமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகளுக்கும் உரிய பதில் இதுவரையில் கிடைக்கவில்லை என வருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

## உயர்கல்வி அமைச்சு அறிவிப்பு

மாலம்பே தனியார் மருத்துவக் கல்லூரியைப்போல் மேலும் சில தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக உயர் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் பேராதனை ஆகிய பல் கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களும் நிபுணர் குழுவும் இணைந்து இரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு பிரவேசிப்பதற்கான தகைமையைப் பூர்த்தி செய்யத் தவறும் மாணவர்களுக்கு உயர்ந்த மட்டத்திலான வைத்திய பட்டமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிடுகிறார். (ஸ்ரீ-2)

# சுதந்திரக் கட்சியின் 60 ஆம் ஆண்டு நிகழ்வில் சந்திரிக்காவுக்கு அழைப்பில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆம் ஆண்டு பொதுக்கூட்ட நிகழ்வுகளின்போது கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் புதல்வியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

சந்திரிக்கா பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் 60ஆம் ஆண்டு பொதுக்கூட்ட நிகழ்வுகளில் சந்திரிக்காவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அவரது அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டுநடைபெற்றஆண்டுப் பொதுக்கூட்ட நிகழ்வுகளின் போதும் சந்திரிக்காவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதே வேளை சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காரியாலய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வண்ணத்துப்பூச்சி பூங்காக்களை அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பொது இடங்களில் வண்ணத்துப்பூச்சிப் பூங்காக்களை அமைப்பதற்கு தேசிய உயிர் பல்வகைமை செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டிற்கு உரித்தான வண்ணத்துப் பூச்சிகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படுவதாக செயலகத்தின் பணிப்பாளர் காமினிகமகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வண்ணத்துப்பூச்சிகள் முட்டை இடுவதற்கு பயன்படுத்தும் தாவரங்களும் தேன் எடுப்பதற்கு பயன்படுத்தும் மலர் செடிகளும் அந்தப் பூங்காக்களில் நாட்டிவைக்கப் படவுள்ளன. (ஸ்ரீ-2)

# திருமலை துறைமுகத்தை அண்டிய ஆயிரம் ஏக்கர் காணி குத்தகைக்கு

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்தை அண்டிய ஆயிரம் ஏக்கர் காணி குத்தகைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தனியார் முதலீட்டாளர்களுக்கு இந்தக் காணிகள் குத்தகைக்கு விடப்படவுள்ளதாக துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

காணிகளை குத்தகைக்கு விடுவது தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக துறைமுக அதிகாரசபையின் தலைவர் பிரியாத் விக்ரம தெரிவித்துள்ளார்.

வாகன உதிரிப்பாகம் மற்றும் இலத்திரனியல் சாதன உற்பத்தி ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. காணிகளை குத்தகைக்கு விடும் பணம் துறைமுக அபிவிருத்திக்காக பயன்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் சர்வதேச ரீதியான முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழ், சிங்களத்தில் இணையத்தள டொமேன் பெயர்களை பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் இணையத்தள டொமேன் பெயர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆங்கிலமொழியை பயன்படுத்தாமல் தமிழ் மற்றும் சிங்கள விசைப் பலகையை பயன்படுத்தி இணையத்தளங்களுக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பு கிடைக்குமென எல்.கே.டொமேன் பதிவாளர் பேராசிரியர் கிஹான் டயஸ் குறிப்பிடுகிறார்.

அரச மற்றும் தனியார் துறையை சேர்ந்த எந்தவொரு நிறுவனமும் இந்தத் திட்டத்தில் தம்மை இலவசமாக பதிவு செய்துகொள்ள முடியுமென அவர் கூறியுள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உள்ள இணையத்தளங்களுக்குள் பிரவேசிப்பதற்காக இதுவரை காலமும் ஆங்கில மொழியில் அதற்கான பெயரை தட்டச்சு செய்ய வேண்டியிருந்தது.

புதிய நடைமுறைக்கு அமைய இணையத்தளத்தில் முகவரியை தமிழ்மொழியில் அல்லது சிங்களமொழியில் தட்டச்சு செய்வதன்மூலம் அதற்குள் பிரவேசிக்க முடிமென அவர் குறிப்பிடுகிறார். (ஸ்ரீ-2)

# மற்றொரு கோணம்



## எந்த வடிவத்திலும் உங்கள் கடவுளை நீங்கள் உருவாக்கலாம்

**மனநோய் பிடித்தவர்களைப் பார்த்தால் அச்சப்படுகிறேன். அவர்கள் ஏன் அப்படி இருக்கிறார்கள்? (இக்கேள்விக்குரிய பதில் தொடர் கீழே.)**

அதற்காக மற்ற நாட்களில் நீங்கள் நோயில்லாமல் இருந்ததாக பொருளில்லை. நோயோடிருந்தீர்கள். அதை கையாளுகிற நிலையில் இருந்தீர்கள்.

அதே போல் மனநிலையை

### ஆன்மீகம் 32

பொறுத் தவரையிலும் ஏறக்குறைய நோய் வாய்ப்பட்டுத்தான் இருந்தி ருக்கிறார்கள். அவர்கள் கையாளக்கூடிய அளவு நோய் வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. ஏதோ ஒரு நேரத்தில் அது அதிகமாகிறது. மீண்டும் சரியாகி விடுகிறது.

ஒரு பைத்தியம்தான் இந்தத் தூணோடு பிணைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவரைக் கட்டி வைப்பதற்கு சங்கிலியும் இல்லை. கயிறும் இல்லை. ஆனால் தான் பிணைக்கப்பட்டிருப்பதாக கருதுவார். அவர் அதை சுற்றிச் சுற்றி போய்க் கொண்டிருப்பார். நீங்கள் என்ன சொன்னாலும் அவர் கேட்கமாட்டார். ஏனென்றால் அவர் பிணைக்கப்பட்டிருக்கிறோம். என்று நினைத்துக் கொண்டிருப்பார். இப்படித் தான் எல்லோரும் தங்களை ஏதாவது தூணோடு பிணைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதுவும் ஒரு பைத்தியக்காரத்தனம் தான்.

உங்கள் உடல் மற்றும் உணர்வு நிலை சார்ந்து சக்திகளுக்கு வெளிப்பாடு தேவையாக இருக்கிறது. அதற்காகத் தான் உங்கள் மதுக் கடைகள், பொழுதுபோக்கு சங்கங்கள், டிஸ்கொதேக்கள் எல்லாம் உருவாக்கினர். தங்களுக்குள் இருக்கிற பைத்தியக்காரத்தனத்தை எங்காவது அவர்கள் செலவிட வேண்டும். இந்த டிஸ்கொதேக்களுக்கு போனால் நீங்கள் மூச்சு விடக்கூட முடியாது. அவ்வளவு வேர்வையும் புகையும் நிரம்பியிருக்கிறது. அங்கே நடனம் ஆடக் கூட முடியாது. யாராவது உங்களை தள்ளிவிட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆனால்' எதையாவது செய்து உங்கள் மனதிலிருக்கிற அந்த பதட்டத்தை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் பைத்தியம் பிடிக்கும். எனவே அந்தந்த வாரம் சேகரித்த பைத்தியக்காரத்தனத்தை சனிக் கிழமை எரிக்கிறார்கள். மீண்டும் அந்த பைத்தியக்காரத்தனம் சேர்ந்து கொண்டே போகிறது. அடுத்த சனிக்கிழமை இரவுக்காக காத்திருக்கிறது. இன்னொரு வழியும் இருக்கிறது. அது உங்கள் பைத்தியக்காரத்தனத்தை முழுமையாக கீழே வீசிவிட்டு நடையிடுகிற முறை. அது இனி உங்களுடைய பகுதியில் ஒன்றாக இருப்பதில்லை. தியானம் இதைத்தான் செய்கின்றது. நீங்கள் இப்போழுது நடனம் ஆடினால் . மகிழ்ச்சியாக நடனம் ஆடுகிறீர்கள். எதையோ எரித்தாக வேண்டுமென்பதற்கில்லை.

**கடவுளுக்கு இத்தனை வடிவங்கள் எதற்காக?**

மனிதர்கள் தங்களுக்கு தெரிந்த ரூபத்திலேயே கடவுளின் ரூபங்களை உருவாகினார்கள். மனிதர்கள் எருமையளாக பிறந்திருந்தால் அவர்களின் கடவுளர்களும் எருமை ரூபத்தில் இருந்திருப்பார்கள். அந்த வடிவங்களுக்குள் சக்தி நிலையை நிலை நிறுத்த அவர்கள் கற்றார்கள். எந்த வடிவத்திலும் உங்கள் கடவுளை நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். இது தான் கடவுள் என்று அவர்கள் எல்லையேதும் வகுக்கவில்லை. இந்த நாட்டில் எத்தனையோ பழங்குடியினர் தங்கள் வழிபாட்டுக்கென்று கடவுளர்களை உருவாக்கிக் கொண்டார்கள். திருட்டுத் தொழிலை குலத் தொழிலாகக் கொண்ட சில பழங் குடியினரின் கடவுள்களும் ஒரு திருடர்கள்தான். தினமும் திருடப் போகும் முன் அந்தக் கடவுளை வணங்கிவிட்டுச் செல்வார்கள்.

நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்கள் தங்களைவிட மேலான ஒன்றுடன் தங்களை தொடர்பு படுத்திக் கொள்ள எப்போதும் நினைப்பார்கள். யாரும் கிடைக்காது போது சிலர் திரைப்பட நட்சத்திரங்களோடு தங்களை தொடர்பு படுத்திக்கொள்வார்கள். சரியான விடயங்களை நோக்கி மனிதர்கள் செல்வதற்கு ஊக்கம் தருவதற்காக இத்தகைய வழிபாட்டு முறைகள் ஊக்குவிக்கப்பட்டன. இது வலிமையானதொரு விஞ்ஞானமும் கூட. ஒரு வடிவத்தில் இருக்கும் சக்தியை இன்னொரு வடிவம் நோக்கிக் கொண்டிருக்கிற முறை. நீங்கள் ஏதோ ஒன்றை சாப்பிடுகிறீர்கள்; நேற்றுவரை அது மண்ணாக இருந்தது. நீங்கள் சாப்பிட்டால் அது உங்களுக்குள் சென்று மனிதனாகி விட்டது. மண்மனிதனாகிற போது கல் கடவுளாக முடியாதா என்ன? சக்தி நிலை வெவ்வேறு வடிவங்களில் இருத்தப்படுகின்றது. ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு கொண்டு செலுத்தப்படுகின்றது. இருப்பதிலேயே சூட்சுமமான சக்திக்கு கடவுள் என்று பெயர்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

03

"மகட் கொடை எதிர்ந்த மடங்
கெழு பெண்டே
தொலைந்த நாவின் உலைந்த
குறுமொழி
உடன் பட்டு ஒராத் தாயரொடு
ஒழிபுடன்
சொல்லலை கொல்லோ...."

பரத்தையரைத் தலைவனுக்கு கொணர்ந்து கொடுக்கும் விறலியின் பேச்சுப் பற்றிய குறிப்பாக இப் பாடல் அடிகள் அமைந்துள்ளன. விறலி அறிவற்றவள். மெய் பேசுவதைத் தொலைத்த நாவினையுடையவள். நிலைகுலைந்த மிக இழிந்த சொற்களைப் பேசுபவள். பிறர் அறியாதபடி மறைவாகப் பேசுந் தன்மையுடையவள். கண்டார்க்கு இனியன கூறும் தன்மையள் என அவளுடைய மொழியின் தன்மை விளக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் மொழியின் இனிமையான பண்பு பல பாடல்களில் "தேமொழி"யென சிறப்பிக்கப்பட்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்,**
**முன்னை நாள் ஆய்வாளர்,**
**ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்.**

டுள்ளது. அவ்வாறு பெண்ணுடைய மொழி இனிமையாக அமைந்ததற்குரிய காரணத்தையும் குறும் தொகைப்பாடல்(72) குறிப்பிடப் பட்டுள்ளது.

"தேமொழித் திரண்ட மென்தோள்
மாமலை பரீஇய வித்தி ஏனல்
குரீஇ ஒப்புவாள் பெருமழைக்
கண்ணே"

என வரும் அடிகளில் குரிவியோப்புவதால் பெண்ணின் குரல் இனிமை பெற்றமை குறிப்பிடப்பட்டுள்ளது. பெண் மொழி அதிக இனிமையானது என்பதை பிற்கால இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன.

"மட மொழி" என்பது இளமையான மொழியென்ற விளக்கத்தைத் தருகின்றது. நற்றிணை (207) "பரதவர் மட மொழிக் குறுமகள்" என்ற தொடர் பெண் மொழியின் இளமைத்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

தன்மை பற்றி குறிப்பிடுகிறது. மொழியின் பண்பு வயது நிலையில் மாற்றம் அடைதை புலவர் தவறாமல் பதிவு செய்ய முயன்றுள்ளனர். எனவே பெண் மொழியைப் பற்றிப் புலவர்களுடைய விளக்கங்களை நுணுகிப்பார்க்க வேண்டி தேவையும் இன்று ஏற்பட்டுள்ளது. பாடல்கள் புலவருடைய புலமைச்சிறப்பால், பாடப் பெற்றாலும் பெண்ணின் மொழி பற்றிய ஒரு கருத்து நிலையை வெளிப்படுதவும் முயற்சி நடைபெற்றுள்ளது. கூற்றுநிலையாக அகப்பாடல்கள் புனையப்பட்டமைக்கும் இதுவே காரணம். உணர்வு நிலையில் வேறுபட்டிருந்த ஆணும் பெண்ணும் மொழி பயன்படுத்தலிலும் வேறுபட்டிரிப்பதை புலவர் உணர்த்திச் சென்றுள்ளனர்.

**குறுந்தொகைப்பாடல்களின் பகுப்பு நிலை**

குறுந்தொகைப்பாடல்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களும் உள்ளன. அவற்றைப் பின்வரும் அட்டவணையில் ஒரேபார்வையில் காணலாம்.

| புலவர் பெயர்கள் | பாடல் எண் |
|---|---|
| 1.அள்ளூர் முல்லையார் | 32,67,68,93,96,140,157,202,237 |
| 2.ஆதிமந்தியார் | 31 |
| 3.ஒப்பூர் மசாத்தியார் | 126,139,156,220,275 |
| 4.ஔவையார் | 15,23,28,29,39,43,80,91,99, 102,158,183,200,364,388 |
| 5.ஊண்பித்தை | 232 |
| 6. கச்சிப்பேட்டுநன்நாகையார் | 30,172,180.192,197,287 |
| 7.காக்கைப்பாடினியார் | 210 |
| 8.நற்செல்லையார் | - |
| 9.நன்னாகையார் | 118,325 |
| 10.பூங்கணுத்திரையார் | 48,171 |
| 11.வருமுலையாரித்தி | 176 |
| 12.வெள்ளி வீதியார் | 26,44,58,130,146,149,169,38[illegible] |

(தொடரும்)

# பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இலங்கைக்கு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்த முயற்சி

## புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் முனைப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இலங்கைக்கு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு புலி ஆதரவு அமைப்புக்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும் வரையில், பொதுநலவாய நாடுகள் பேரவையில் இலங்கை வகித்து வரும் அங்கத்துவத்தை இடைநிறுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் க்ளோபல் தமிழ் போரம் அமைப்பு உள்ளிட்ட சில அமைப்புக்கள் இவ்வாறு இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலும் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் மற்றும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் கூட்டம் ஆகியவற்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பார் என வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

க்ளோபல் தமிழ் போரம் அமைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் சுமத்தி வரும் அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளினால் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடுவதில்லை. வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பிரித்தானிய அரசாங்க இணையத்தளத்தில் இலங்கைக்கு எதிராக முறைப்பாடு

பிரித்தானியாவின் அரசாங்க இணையத்தளத்தில் இலங்கைக்கு எதிராக முறைப்பாடு ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் ஒரு இலட்சம் பேர் கையொப்பமிட்டால் அந்த விவகாரம் குறித்து பிரித்தானிய பாராளுமன்றில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது குற்றச்செயல்கள் இடம்பெற்றதாகவும் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் எனவும் குறித்த முறைப்பாட்டு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அடிப்படை முரண்பாடுகள் குறித்து அம்பலப்படுத்தப்படும்

## சர்வதேச மன்னிப்புச்சபை அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் குறைபாடுகள் குறித்து அம்பலப்படுத்தப்படும் என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அடிப்படைமுரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பிலான அறிக்கை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் குறைபாடுகள் எப்போது இவர்களுக்கு நியாயம் கிட்டும் என்ற தலைப்பில் வெளியிடப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பில் பாரிய சர்ச்சை நிலவி வருவதாகக் குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறான ஓர் அறிக்கை வெளியிடப்படுவது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமது தரப்பு சாட்சியங்களை முன்வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச அனர்த்த குழு ஆகியவற்றுக்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது. எனினும் இந்த அழைப்பினை குறித்த மூன்று அழைப்புக்களுமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் நடத்தப்படுவதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அதிகாரி லுலியா கொஸ்டா தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரம் பேசப்படாது என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சில நாடுகள் இலங்கை விவகாரம் குறித்து கேள்வி எழுப்ப தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




★ 1698- ரஷ்ய பேரரசன் முதலாம் பீட்டர் தாடி வைத்திருப்பவர்களுக்கு வரி அறவிட உத்தரவிட்டான்.

★ 1800- மோல்டா பிரித்தானியாவினால் பிடிக்கப்பட்டது.

★ 1839- முதலாவது ஒப்பியம் போர் சீனாவில் ஆரம்பமானது.

★ 1880- ரஷ்யாவில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உலகின் முதலாவது மின்சார ட்ராம் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

★ 1882- ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் நாள் பேரணி நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

★ 1887- இங்கிலாந்தில் எக்செட்டர் நகரில் நாடக அரங்கில் தீப்பிடித்ததில் 186 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1902- இலங்கையில் சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14 மைல் நீளமான தொடருந்துப் பாதை திறக்கப்பட்டது.

★ 1905- ரஷ்ய ஜப்பானியப் போர்: அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமைதி முயற்சியை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு நியூ ஹாம்பஷயரில் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.

★ 1914- முதலாம் உலகப் போர்: பாரிசின் வடகிழக்கே பிரெஞ்சுப் படைகள் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி அவர்களை வென்றனர்.

★ 1932- பிரெஞ்சு மேல் வோல்ட்டா பிளவடைந்து ஐவரி கோஸ்ட் பிரெஞ்சு, சூடான், நைஜர் என மூன்று தனிநாடுகளானது.

★ 1939- இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா போரில் தனது நடுநிலையை அறிவித்தது.

★ 1961- அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கிறேட்டில் இடம்பெற்றது.

★ 1969- மை லாய் படுகொலைகள்: அமெரிக்க இராணுவ லெப் வில்லியம் கலி 109 வியட்நாமிய பொது மக்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டான்.

★ 1972- ஜேர்மனியில் மியூனிக்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய இஸ்ரேலிய வீரர்களின் மீது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1977- வொயேஜர் 1 விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1978- காம்ப் டேவிட் ஒப்பந்தம்: இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்கும் இடையில் மேரிலாந்தில் அமைதி ஒப்பந்த மாநாடு ஆரம்பமானது.

★ 1980- உலகின் மிக நீளமான நெடுஞ்சாலைச் சுரங்கமான கோதார்ட் சாலைச் சுரங்கம் (16224 கி.மீ) சுவிட்சர்லாந்தில் திறக்கப்பட்டது.

★ 2005- சுமாத்ராவில் பயணிகள் விமானம் ஒன்று தரையில் மோதியதில் தரையில் இருந்த 39 பேர் உட்பட மொத்தம் 143 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

★ 1872- வ.உ.சிதம்பரம்பிள்ளை, விடுதலைப் போராட்ட வீரர் (இ.1938)


★ 1945- மு.மேத்தா, கவிஞர்

★ 1950- வீரசிங்கம் துருவசங்கரி, இலங்கையைச் சேர்ந்த அறிவியலாளரும் கண்டுபிடிப்பாளரும் (இ.2006)



★ அன்னை தெரேசாவின் நினைவுதினம் இன்றாகும். (பி.1910)

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!



சீமானின் அதிரடித் தொடர் 4

வறண்ட மண்ணில் வான் மழை கொட்டியது போல், கலங்கிய கண்களுக்கு கைக்குட்டை கிட்டியது போல் தமிழக சட்டமன்றத்தில் இயற்றப்பட்டிருக்கிறது ஒரு தீர்மானம். 'எங்களின் துயரத்திற்கு நீதி கேட்க நாதி இல்லையா?' என தொண்டை நரம்புகள் துடிக்க கத்தினோமே... காணச் சகிக்காத காணொளி ஆதாரங்களைக் கண்டு, 'உலகமே உன் மனச்சாட்சி எங்கே!' என ஓலமிட்டோமே... அதற்கெல்லாம் முதல் ஆறுதலாக பட்டுப் போன கேழ்வரகுக்கு சொட்டாகச் சுரந்த மழையாக சிங்கள அரசின் போர்க் குற்றங்களுக்கு எதிராக முதல்வர் ஜெயலலிதா அம்மையார் தீர்மானம் இயற்றி இருக்கிறார்.

தமிழ்க் குடையின் கீழ் தத்தளித்து நிற்கும் உறவுகளே... இது வெறும் தீர்மானம் அல்ல. நாம் விரும்பிய தீர்மானம். துடித்தவர்களுக்காகவும் கண்ணீர் வடித்தவர்களுக்கா

கொடூரங்களை தட்டிக் கேட்காத போது உலகம் எப்படி நம் கண்ணீருக்காக கைகோர்க்கும்?

எந்தத் தீர்மானத்துக்காக கலைஞர் கருணாநிதியிடம் நாம் ஏங்கி



தமிழர்களின் வலி சுமந்த வாரிசாக முழங்க... அண்ணன்கள் பண்ருட்டியார், பாண்டியராஜன், ஜவாஹிருல்லா, சரத்குமார், கிருஷ்ணசாமி, தனியரசு உள்ளிட்டவர்கள் ஒருமித்த உணர்வோடு ஆதரிக்க... தட்டிக் கேட்பவராக போர்க் குற்ற தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா அம்மையார்.

பதைத்துக் கிடந்த பத்துக் கோடி தமிழர்களின் இதயங்களை நெகிழ்வில் நனைத்த முதல்வர் வாழ்க. இதற்கிடையிலும் 'இலங்கைக்கு பொருளாதாரத்தடை விதித்தால், அது அங்கே இருக்கும் தமிழர்களையும் பாதிக்காதா?' எனக் கொதித்தார்கள் சில காங்கிரஸ்காரர்கள்.

ஏனய்யா...போர் நடந்த போது எம் மக்களுக்கு ஏற்ப

முயற்சி எடுக்கவில்லை? பாராட்டுப் பத்திரம் வாசிப்பதற்காகவே ஒரு பழுத்த முதியவரை வைத்திருந்தீர்களே... இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரச்சொல்லி ஏனய்யா அவரிடம் பேசவில்லை?

'பொருளாதாரத் தடை' என்றவுடன் நீங்கள் அலறுவதன் அர்த்தம் எங்களுக்குப் புரியாமலில்லை. இலங்கையின் போர்க் குற்றங்களை ஆதாரபூர்வமாக ஆராய்ந்த ஐரோப்பிய யூனியன் சிங்கள அரசின் செவிட்டில் அறையும் விதமாக இலங்கை வர்த்தகத்துக்கு வழங்கிய வணிக வரிச்சலுகைகளை நிறுத்தியது.


ஆயத்த ஆடை வணிகத்தில் வளம் கொழித்த இலங்கைக்கு அது சம்மட்டி அடியானது. மூன்று இலட்சத்துக்கும் மேலான சிங்களவர்களுக்கு வேலை பறிபோனது.

தமிழக அரசின் தீர்மானத்தை



## நீங்களா வ.உ.சி.வழி வந்தவர்கள்?

பொதுசன நூலகம்
[illegible]
நகர சபை, யாழ்ப்பாணம்.



கவும் முதன்முறையாக நாம் எழுப்பி இருக்கும் அதிகாரபூர்வ போர்க் குரல்.

இனப்படுகொலைகளை நிகழ்த்தியவனுக்கு எதிராக நாம் தொடுத்திருக்கும் முதல் சுருக்கு... கொக்கரித்துச் சிரித்தவர்களின் தலையில் விழுந்தமுதல் குட்டு... கதியிழந்து தவிப்பவர்களுக்கான முதல் நம்பிக்கைக் கயிறு!

வில்லங்கத்தால் வீழ்த்தப்பட்டவர்களுக்கும் வஞ்சனையால் வளைக்கப்பட்டவர்களுக்கும் முதல் ஆறுதலாக நீண்டிருக்கும் நிவாரணமே இந்தத் தீர்மானம்! தீர்க்கமாகச் சொல்வதானால் தமிழர் வாழ்வின் வரலாற்றுத் திருப்புமுனை!

சிங்கள அரசின் கொடூர வெறியைக் கண்டித்து நாம் எல்லோரும் முழங்கினோம். கைகோர்த்துக் கதறினோம். உலகத்தின் ஜனநாயக சக்திகளை எல்லாம் கைகூப்பிக் கெஞ்சினோம். ஆனால் துயரத்தை உணர்ந்தவர்கள் கூட நம் துக்கத்தைத் தீர்க்க முன்வரவில்லை. காரணம், தமிழர்களின் அரசே ஈழக்

நின்றோமோ... எத்தகைய கிழக்குக்காக நாம் இலக்கு நோக்கிக் காத்திருந்தோமோ... அந்தத் தீர்மானத்தைத் தான் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் சட்டமன்றத்தில் இயற்றி ராஜபக்ஷவின் சட்டையைப் பிடித்திருக்கிறார்.

'கேட்பதற்கு நாதி இல்லை' எனக் கொக்கரித்த வல்லூறுகளின் வாயை அடைக்க தன்மானம் கொண்டவராக இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கச் சொல்லி முழங்கி இருக்கிறார் ஜெயலலிதா.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அண்ணன் குணசேகரன் ஈழத்

டாத பாதிப்பா பொருளாதாரத் தடையின் போது ஏற்படப் போகிறது? இடி விழுந்த போது இருகைகளையும் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தவர்கள், அடி விழும் போது அலறுகிறீர்களே... இது நியாயமா?

தமிழர்களின் மீது திடீர் அக்கறை பொங்கியவர்களாக வெடிப்பவர்களே... முதல்வர் கொண்டு வந்த தீர்மானம் தவறு என முழங்க முடியுமா உங்களால்? காயங்களில் பூசப்பட்ட மருந்தாக மலர்ந்திருக்கும் அந்தத் தீர்மானத்தை கடந்த ஆட்சியிலேயே இயற்ற நீங்கள் ஏனய்யா


ஏற்று இந்திய அரசு இலங்கை மீது பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தால் இதைவிட பல மடங்கு அடியை இலங்கை எதிர்கொள்ள வேண்டியி ருக்கும்! எங்கோ அடி அடித்தால் புளிய மரத்தில் நெறிகட்டும் என் பார்களே... காங்கிரஸ் காரர்களின் பதைப்புக்கு காரணம் புரிகிறதா தமிழர்களே...

இனத்துக்குச் சிக்கல் வந்த போது எழாத உணர்ச்சி இலங்கைக்கு சிக்கல் என்றதும் பொங்கி எழுகிற மாயமென்ன? 104 ஆண்டுகளுக்கு பின்னர் திடீரென இங்கிருந்து இலங்கைக்கு கப்பல் பயணத்தை தொடங்கி இருக்கிறீர்களே... சுதந்திரத்துக்காக கப்பலோட்டிய எம் மறத் தமிழன் வ.உ.சிதம்பரம் வழி வந்த தமிழர்களாக நீங்கள் இருந்திருந்தால், ரணமாகவும் பிணமாகவும் எம் தமிழன் இலங்கையில் தத்தளித்த போது உங்களின் கப்பலை ஓட்டி இருக்க வேண்டும்; எம் தமிழ் மக்களை மீட்டிருக்க வேண்டும்!

துடித்த தமிழர்களுக்காக கரம் நீட்டாத காங்கிரஸ்காரர்களே... வக்கற்ற இலங்கையின் வணிகச் சிறப்புக்காக இன்றைக்கு கப்பல் விடுகின்றீர்களே... நீங்களா வ.உ.சி.யின் வழி வந்தவர்கள்?

(பொறி பறக்கும்)

# நவீன எண் சோதிடம்



## எப்பொழுதும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று எண்ணுவர்

37

### உடல் 4 உயிர் எண் 8

4,12,22,31 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய முன்றையும் கூட்டி வரு கின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் இவர் கள் ராகு, சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் எப்பொழுதும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று எண்ணுவர். அதோடு எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்க முயல்வர். பல அனுப வங்களை பெற்றிருப்பதால் நண் பர்கள் இவர்களை எல்லா விடயங்களையும் தெரிந்தவராக மதிப்பர். தாம் கண்ட காட்சி களையும், நிகழ்ச்சிகளையும் மற்றவர்கள் பிரமிக்கும்படி வர்ணிப்பர்.

இவர்கள் பார்ப்பதற்குக் கம் பீரமாகவும், குறுகுறுப்பான முகத்தோற்றமுடனும் இருப்பர். கண்கள் சிறிது மிதந்து காட்சி யளிக்கும். முன்பற்கள் இரண் டும் பெரிதாகவும், சிலருக்கு ஒழுங்கற்ற பல் வரிசையாகவும் இருக்கும். தன் மனத்தில் தோன்று கின்ற கருத்துக்களைத் துடுக் காகவும், பகிரங்கமாகவும் வெளியிடுவர். மற்றவர்கள் தன்னைப் பற்றி அபிப்பிராய பேதம் கொள்வார்களே என்று கவலைப்படமாட்டார்கள்.

சிலர் தன்னுடைய அனுபவத் தால், தன்னை மாற்றிக்கொண்டு மற்றவர்களோடு ஒட்டிப்போவர். இன்னும் சிலர் யார் எதைக் கூறினாலும் மறுத்து தன் கருத் தையே வெளியிடுவர். விவாதத் திறமை மிக்க இவர்களை மற்றவர்கள், நல்ல மனிதர் என்று எளிதில் புரிந்து கொள்ளலாம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உள்ளொன்று வைத்து புற மொன்று பேசத் தெரியாத வெள்ளை மனம் கொண்ட வர்கள்.

எப்பொழுதும் குழந்தைகள் மீது அதிக அன்பு செலுத்துவர். இவர்களில் சிலர் காதல் வயப் பட்டு கஸ்டப்படுகின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விட்டால் எல்லா காரியங்களும் வெற்றியடைந்து நல்ல பொரு ளாதார வசதியைப் பெறுவர். குடும்ப வாழ்க்கை குழப்ப மானாலும், கல்வியில் தோல்வி யுற்றாலும் பெயர் நன்றாக அமையுமேயானால் கல்வியில் வெற்றி. நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நிலம், வீடு, வாகனம் போன்ற பாக்கியங்க ளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வர்.

ஆனால் பெயர் பொருத்தமற்று இருந்தால் வாழ்க்கை ஏறவும் இறங்கவுமாக இருக்கும் சிலர் பெயரைப் பொருத்தமாக மாற்றிக் கொண்டு படிப்படியாக வாழ்க்கை யில் உயர்ந்து கொண்டிருப்பதை கண்கூடாகக் காணமுடியும்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் தொழிலிலும் சிலர் உத்தி யோகத்திலும் உயர்ந்த இடத்தை வகிப்பர். பணம் சேர்ப்பதில் ஆசை கொண்ட இவர்களுக்கு பல்வேறு வழிகளிலும் பணம் சேரும். சில ருக்கு வாழ்க்கைத் துணையால் பொருள் சேரும். பெற்றோர் மீது பாசம் கொண்டவர்களாதலால் அவர்களுக்கு தன்னால் முடிந்த உதவியைக் கடைசிவரை செய்து கொண்டிருப்பர்.

எல்லோரும் இவர்களை விரும் பும் அளவிற்கு நடந்து கொள்வர். ஆனால், வாதம் செய்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக ஒரு விடயத்தை மறைத்துப் பேச வேண்டிய இடத் தில் மறைத்தும், வெளிப்படையாக பேச வேண்டிய இடத்தில் வெளிப் படையாகப் பேசவும் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படி பேசத் தெரியாது எல்லா இடங் களிலும் தன் கருத்தைக் கூறுவதால் கஸ்ட நிலைக்கு ஆளாகின்றனர். தேவையற்ற விடயங்களுக்காக மனதை குழப்பிக் கொள்கின்றனர்.

சாஸ்திரம், சமயம், மருத்துவம், ஜோதிடம், கைநுணுக்கத் தொழில் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக் கும். எதிலும் நிரந்தரமாக இவர்கள் மனம் லயிக்காது. பல்வேறு வழிகளிலும் சென்று பணம் ஈட்டுவர். சளைக்காமல் போராடி முன்னேற்றத்தைப் பெறப் பாடு படுவர். இவர்களது வாழ்க்கையில் போட்டி இல்லாவிட்டால் முன் னேற்றம் தடைபடும். படுத்தால் வேகமாக எழுந்திருக்க மாட் டார்கள். ஆனால் விழித்திருந்தால் சிந்தித்து வேலை பார்த்துக் கொண்டேயிருப்பர். இவர்களுக் குப் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கை சிறப்படை யும்.

**தொழில்**

ராகு, சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு கை நுணுக்கத் தொழில் அனைத்தும் சிறந்த வையே. இரும்பு, வாகனம், பேரம் பேசுதல், கமிஸன், ஏஜென்சி போன்றவைகளும் சிறந்த லாபம் தரும்.

**நோய்**

இவர்களுக்கு உஸ்ண சம்மந்த மான அனைத்து நோய்களும் வந்து நீங்கும். முட்டுவலி, வயிற்று வலி, முதுகுவலி போன்றவைகளும் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

ராகு, சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சூரியன்,சுக்கிரன், புதன் ஆதிக்கமான 19,37, 46,64, 15, 33, 42, 51, 60, 69,14,23, 32,41, 50,59 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமா எண்-1,6,5

யோகமான தேதிகள்- 1,10,19, 28,6,15,24,5,14,23

யோகமான மோதிரக்கல்- கோமே தகம், நீலக்கல்

யோகமான நிறம்-மஞ்சள், நீலம், வெளிர் நீலம்


ஆகாதநிறம்-கறுப்பு, சிவப்பு, காப்பிக்கலர்

ஆகாத தேதிகள்-8,17,26

## பெயர் எண்களின் பலன்

**7 எண் பலன்**

முழுமையாக கேது ஆதிக்கம் கொண்ட இந்த எண் பெயரில் வந்தால் தெய்வீக சக்தி கிடைக் கும். பலருக்கு அறிவுரை வழங்கு வர். ஆனால் தன் சொந்த வாழ்க்கை நிலையில்லாது போய்விடுவர். பெற்று வாழ்வர். பெண்கள் விடயத்தில் கெட்ட பெயர் வரும். ஆனால் 2,11,20,29,7,10,25 தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணில் பெயரை அமைத்துக் கொண்டால் துன்பத்திற்கு ஆளா வர்.



**8 எண் பலன்**

பூரண சனி ஆதிக்கம் கொண்ட இந்த எண்ணை பெயராக உடைய வர்கள், பல்வேறு துன்பங்களுக் கிடையே தனது காரியத்தை சாதித்துக் கொள்ளுவார்கள். திடீரென்று ஆபத்துக்களும் உண் டாகும். அந்த ஆபத்திலிருந்து தப்பித்த பின் அதைப்பற்றி அழ காக விமர்சிப்பர். இப்படிப் பல்வேறு சோதனையால் ஆத்மீக வாழ்க்கையில் ஆர்வத்தைக் காட் டுவர்.

**9 எண் பலன்**

எதிர் நீச்சல் போட்டு இவர்கள் பல்வேறு அனுபவங்களையும் பெற்று தூரதேசப் பயணங்களை யும் செய்வர். இவர்களுக்கு எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும். மனபலம் கொண்ட இவர்கள் பேச்சாற்றலால் தனக் கென்று ஒரு சமூகத்தை அமைத் துக் கொண்டு எதிர்ப்புகளைத் தகர்தெறிவர். பின் வாழ்க்கையில் எல்லாவிதமான வசதிகளையும்

**10 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவரகளுக்கு எவ்வழி யிலாவது முன்னேற்றம் கிட்டும். பலர் போற்றும் மனிதனாக வாழ்வர். பத்து நாட்கள் வருமா னத்தையும் ஒரே நாளில் பெற்று விடுவர். கையில் பணம் இருந் தால் சோம்பேறியாக இருந்து விடுவர். இவர்கள் வாழ்க்கை ஏறவும் இறங்கவுமாக இருக்கும். நேர்மையான நடவடிக்கையுடை யவராக இருந்தால் எப்பொழுதும் குன்றாத யோக முண்டு. பாதி நாட்களுக்கு வேண்டிய உணவை உண்டு மீதி நாட்களில் உறங்கும் மலைப்பாம்பு போன்றவர்கள் என்று இவர்களைச் சொல்லலாம்.

(தொடரும்)

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT



# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**
(31.08.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பெர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. சொவ்றிலொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
31. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
32. பீப்பிள்ஸ் மேச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**
தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk
CENTRAL BANK OF SRI LANKA 60 growth & stability

# அரசிடமிருந்து இதுவரை பதிலில்லை அடுத்த கட்டம் குறித்து ஆலோசனை

அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட மூன்று விவகாரங்கள் தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை கடந்த மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்ற போதே மூன்று விவகாரங்கள் தொடர்பில் எழுத்து மூலம் பதிலளிக்க வேண்டும் என கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது ஆட்சி அதிகார முறைமை, மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் வரி, நிதி அதிகாரங்கள் ஆகிய மூன்று விடயங்களை முன்வைத்து அரசாங்கத்திடம் இருந்து இருவார காலத்திற்குள் எழுத்துமூல பதிலை எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது.

இந்நிலையில் நேற்றுடன் ஒரு மாதம் முடிவடைந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் ஊடகங்கள் கருத்துக் கேட்ட போதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்பு ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் பேச்சுக்களை தொடர்வதற்கான ஆர்வம் அரசாங்கத்திடம் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சர்களும் இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். எப்படியிருப்பினும் இது வாய்மூல பேச்சுக்களே அன்றி உத்தியோகபூர்வ உத்தரவாதங்களாக இல்லை.

எனவே இது விடயத்தில் அரசாங்கம் அக்கறைகொள்ளாத பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் என்றார். (ந-5)

# சிறைக்கைதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் திட்டம் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலை கைதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

10 ஆயிரம் கற்றறிந்தவர்களை நோக்காகக் கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறைக்கைதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கி அவர்களை சமூகமயப்படுத்த இதன்மூலம் எதிர்பார்ப்பதாகவும் இத்திட்டத்தின் முதல்கட்டம் கண்டிபோகம்பர சிறைச்சாலையில் இன்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் இளைஞர் விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியை தொடரும் மாணவர்களுக்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆசிரிய மாணவர்களுக்கான மீட்டல் நாட்பாடசாலைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் நடைபெறும். நாட்பாடசாலைகளுக்கான நேரசூசியை பிராந்திய நிலையத்தின் அறிவித்தற் பலகையில் பார்வையிடலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

* * * * * *

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பட்டமேல் விசேட தேவைகள் சார் கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை தொடரும் மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன. இதற்கான மீட்டல் நாட்பாடசாலைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நடைபெறும். இவற்றுக்கான நேரசூசியை பிராந்திய நிலையத்தின் அறிவித்தற் பலகையில் பார்வையிடலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

* * * * * *

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் முன்பள்ளிக் கல்விச்சான்றிதழ் கற்கைநெறியை தொடரும் மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 18 முதல் நடைபெறவுள்ளன. இதற்கான மீட்டல் நாட்பாடசாலைகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி காரணமாக 41 கோடி ரூபா நட்டம்

(கொழும்பு)

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியினால் இதுவரையில் 41 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

2 ஆயிரத்து 500 தொன் தரம் குறைந்த பெற்றோல் சந்தைக்கு விநியோகம் செய்ய முடியாமல் தேங்கிக் கிடப்பதாக குறிப்பிட்டுள்ளார்.


தரம் குறைந்த பெற்றோலை சந்தைக்கு விநியோகம் செய்ய முடியாத காரணத்தினால் அதனை நெப்டா எரிபொருளாக மாற்றி இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவுள்ளது.

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதியினால் ஏற்பட்டுள்ள சகல நட்டத்தையும் இறக்குமதி செய்த நிறுவனத்திடம் அறவீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எனினும் தரம் குறைந்த பெற்றோலை தாம் வழங்கவில்லை எனவும் நட்டத்தை பொறுப்பேற்க முடியாது எனவும் குறித்த சிங்கப்பூர் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அமெரிக்க வெளியுறவு இரகசியங்கள் குறித்த மேலும் இரண்டரை இலட்சம் ஆவணங்கள்

## விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது




(கேன்பரா)

விக்கிலீக்ஸ் இணையத்தளம் தன் வசம் இருந்த மேலும் இரண்டரை இலட்சம் அமெரிக்க வெளியுறவு இரகசிய ஆவணங்களை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதனால் அதன் நிறுவுநர் ஜுலியன் அசேஞ்சே அவுஸ்திரேலிய அரசால் கைது செய்யப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளியுறவு இரகசியஆவணங்களை இலட்சக்கணக்கில் வெளியிட்டு பிரபலம் அடைந்த விக்கிலீக்ஸ் இணையத்தளம் பிரிட்டன் தலைநகர் லண்டனில் இருந்து வெளிவரும் தி கார்டியன், அமெரிக்காவின் நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் தி நியூயோர்க் டைம்ஸ், ஜேர்மனியின் டெர் ஸ்பைஜல் , ஸ்பெயினின் எல் பைஸ் மற்றும் பிரான்சின் லீ மாண்ட் ஆகிய பத்திரிகைகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது.

அதன்படி அமெரிக்க இரகசிய ஆவணங்கள் இந்தப் பத்திரிகைகள் மூலம் முதலில் வெளியாகும். அதன் பின் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் இந்த ஆவணங்கள் வெளியாகும்.

ஆனால் கடந்த டிசம்பரில் விக்கிலீக்ஸ் இணையத்தளம் தரும் தகவல்களின் ஆதாரங்கள் குறித்து சந்தேகம் கொண்ட தி கார்டியன் அதனுடனான தனது உறவை சட்டப்படி முறித்துக் கொண்டது.

இந்நிலையில் சமீபத்தில் விக்கிலீக்ஸ் வெளியிடாமல் வைத்திருந்த அமெரிக்க வெளியுறவு இரகசிய ஆவணங்கள் குறித்த பாஸ்வேர்டுகளை கார்டியன் பத்திரிகை வெளியிட்டு விட்டதாக அசாஞ்சே குற்றம் சாட்டினார்.

இதையடுத்து வெளியிடாமல் இருந்த இரண்டு இலட்சத்து 51 ஆயிரம் அமெரிக்க இரகசிய ஆவணங்கள் நேற்று முன்தினம் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன. இவற்றை எவ்வித பாஸ்வேர்ட்டும் இன்றி நேரடியாக இணையத்தளத்தில் எவரும் பார்க்கலாம்.

இவற்றுக்கு எந்தப் பத்திரிகைகளும் உரிமைகோர முடியாது. இதனால் கடுப்பாகிப் போன தி கார்டியன் உள்ளிட்ட 5 பத்திரிகைகளும் நேற்று முன்தினம் வெளியிட்ட கூட்டறிக்கையில்,

விக்கிலீக்ஸின் இந்த நடவடிக்கை எங்களை வருத்தப்படுத்தியுள்ளது. தற்போது வெளியான ஆவணங்களுக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இவை அனைத்தும் முழுக்க முழுக்க அசேஞ்சின் நடவடிக்கையே என விளக்கம் அளித்துள்ளன.

இந்நிலையில் வெளியான ஆவணங்களில் அவுஸ்திரேலிய உளவுத்துறை தொடர்பாகவும் ஒரு ஆவணம் இருப்பதால் அசேஞ் அவுஸ்திரேலிய அரசால் விரைவில் கைது செய்யப்ப டலாம் என தி கார்டியன் பத்திரிகை கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# நேட்டோ படையினரின் தாக்குதலில் ஆப்கானில் 21 தலிபான்கள் பலி


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவம், நேட்டோ படையினர் நடத்திய அதிரடி தாக்குதலில் 21 தலிபான்கள் கொல்லப்பட்டனர். 11 பேர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் கூறுகையில்,

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆக்கிரமிப்புப் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் ஆப்கான் இராணுவத்தினருடன் நேட்டோ படையினர் கூட்டாக தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதில் 21 தலிபான்கள் கொல்லப்பட்டனர். மேலும் 11 தலிபான்கள் கைது செய்யப்பட்டனர்.

இத்தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் தரப்பில் உயிர்ப்பலி இல்லை. இவ்வாறு உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாக சீன செய்தி நிறுவனமான ஜிங்கூவா இணையத்தளம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



அவுஸ்திரேலியா நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கான்பரா நகரில் பிரதமர் ஜுலியா கில்லார்டை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# சோமாலியா கலவரத்தில் 30 பேர் பலி; பலர் காயம்

(மொகாதிசு)

சோமாலியாவின் மத்திய மாகாணத்தில் நடந்த வன்முறையில் 30பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

ஆபிரிக்க நாடான சோமாலியா ஏற்கனவே கடும் பஞ்சம், பட்டினியால் அவதியுற்று வருகிறது. இந்நிலையில் மத்திய மாகாணமான கல்கயாயூ பகுதியில் பவுண்ட்லாண்ட் மற்றும் கால்மூடெக் என்று இருபிரிவு இனத்தவர் உள்ளனர். இந்த இரு இனத்தவர்களும் இராணுவத்தில் பணியாற்றுகின்றனர். இவர்களில் கால்மூடெக் பிரிவினர் அல்-ஷெபா பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்துள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இதில் பவுண்டலான்ட் இனத்தைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரி முகமது மியூஸ் என்பவர் கால்மூடெக் இனத்தவரால் கொல்லப்பட்டார். இதனால் இரு இனத்தவரிடையே மோதல் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அப்பகுதியில் பெரும் வன்முறை வெடித்தது. ஒருவரை ஒருவர் பயங்கரவாத ஆயுதங்களால் தாக்கிக் கொண்டனர். இந்தக்கலவரத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து சோமாலியா பிரதமர் அபிதிவெலி முகமது அலீ பொதுமக்கள் அமைதி காக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். சம்பவம் குறித்து விசாரணை நடத்தவும் உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# லிபிய தலைநகர் டிரிபோலியில் புரட்சிப் படை தலைவர்கள்

லிபியாவில் புரட்சிப் படையினர் வெற்றி பெற்றதையடுத்து அதன் தலைவர்களில் பெரும்பாலானோர் தலைநகர் டிரிபோலிக்கு வந்துள்ளனர். லிபியாவின் மறு நிர்மாணத்துக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் ஜனாதிபதி முவம்மர் கடாபிக்கு எதிராக கடந்த 7 மாதங்களாக நடைபெற்று வந்த புரட்சி அண்மையில் முடிவுக்கு வந்தது. புரட்சிப்படை மற்றும் அவர்களுக்கு ஆதரவான மேற்கத்தைய நாடுகளின் தாக்குதலை கடாபி ஆதரவு இராணுவத்தால் சமாளிக்க முடியவில்லை. கடாபி நாட்டை விட்டு தப்பியோடிவிட்டதாக தெரிகிறது. அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை.

இந்நிலையில் புரட்சியின் போது பெங்காசி நகரை தங்கள் மையமாகக் கொண்ட புரட்சிப் படையினர் போரிட்டு வந்தனர். இப்போது தலைநகர் டிரிபோலி தங்கள் வசமாகியுள்ளதை அடுத்து புரட்சிப் படையின் தலைவர்கள் தலைநகருக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

இடைக்கால அரசின் பாதுகாப்பு அமைச்சர் அகமது தாரத் இது குறித்து கூறுகையில்,

பெரும்பாலான பாதுகாப்பு படையினர், பொலிஸார் பணிக்குத் திரும்பியுள்ளனர். நாடு இப்போது இயல்பு நிலையை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கிறது.போரின் போது தலைநகரை விட்டு வெளியேறிய மக்களும் வீடுகளுக்குத் திரும்புகின்றனர். அனைவரும் சேர்ந்து வலுவான லிபியாவை உருவாக்குவோம் என்றார்.

லிபியாவின் தேசிய இடைக்கால குழுவின் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலில் கூறுகையில், டிரிபோலிதான் எங்கள் தலைநகர். லிபியாவில் இனி ஜனநாயக ஆட்சி நடைபெறும். இதற்கு சர்வதேச சமூகம் அனைத்து வகையிலும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையுள்ளது. எங்கள் குழு அரசியல் நிர்ணய சட்டத்தை வடிவமைக்கும் தேர்தல் முறையாக நடைபெற்று மக்களாட்சி அமையும் என்றார். (ஸ்ரீ-2)




# கடாபி அரசுக்கும் அமெரிக்க உளவுத்துறைக்கும் இடையிலான இரகசிய தொடர்புகள் அம்பலம்

## இடைக்கால அரசுக்கு சிக்கல்

(டிரிபோலி)

லிபிய தலைநகர் டிரிபோலியில் உள்ள அந்நாட்டின் உளவுத்துறை அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் அமெரிக்க உளவுத்துறைக்கும் (சி.ஐ.ஏ ) கடாபி அரசுக்கும் இடையில் இரகசிய தொடர்புகள் இருந்தது வெளியாகியுள்ளது.

இது அமெரிக்காவுக்கும் லிபியா இடைக்கால அரசுக்கும் இடையிலான உறவுகளை சீர்குலைக்கும் என தகவல்கள் கூறுகின்றன.

டிரிபோலி மீது நேட்டோ விமானப் படைகள் நடத்திய குண்டு வீச்சில் சேதம் அடைந்த கட்டடங்களுக்குள் லிபியா உளவுத்துறை அலுவலகமும் ஒன்று. மனித உரிமைகள் கண்காணிப்பகம், இந்த அலுவலகத்தில் இருந்த சில ஆவணங்களைக் கைப்பற்றி அவற்றில் உள்ள தகவல்கள் வெளியிட்டுள்ளது.

அவற்றின் படி கடாபியின் ஆட்சியில் லிபியா உளவுத்துறை, அமெரிக்காவின் சி.ஐ.ஏ. பிரிட்டனின் எம் 16 உள்ளிட்ட பல நாடுகளின் உளவுத்துறையுடன் தொடர்பில் இருந்தது தெரிய வந்துள்ளது. ஆனால் கடாபி தான் மேற்குலகிற்கு முழு எதிராக தன்னைச் சித்தரித்துக் கொண்டார்.

லிபியாவை சேர்ந்த பயங்கரவாதிகள் பலர் அமெரிக்காவிடம் இருந்தனர். அவர்களை மீண்டும் லிபியாவுக்கு கொண்டு வந்து விசாரிப்பது குறித்து சி.ஐ.ஏ. லிபிய உளவுத்துறையுடன் இணைந்து செயற்பட்டது. கடந்த 2004 இல் இதற்காக ஒரு நிரந்தர அலுவலகத்தை டிரிபோலியில் திறப்பது குறித்து சி.ஐ.ஏ. ஆலோசித்தது.

கடாபி எதிர்ப்பு இராணுவத்தின் தளபதி அப்துல் ஹக்கீம் பெல்ஹாஜ் ஒரு காலத்தில் அல்கொய்தாவுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட லிபியா இஸ்லாமிய போராட்டக் குழுவில் இருந்தவர்.

அவர் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு சி.ஐ.ஏ.வால் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் பின் லிபியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அவரை திருப்பி அனுப்ப 2004 மார்ச்சில் சி.ஐ.ஏ. வுக்கும் லிபியா உளவுத்துறைக்கும் இடையில்தகவல் பரிமாற்றம் நடந்துள்ளது.

அதேபோல் பிரிட்டனின் எம்.16 க்கும் அப்போதைய லிபியா உளவுத்துறைத் தலைவர் மூசா குசாவுக்கும் இடையிலும் தகவல் தொடர்பு நடந்துள்ளது.இது குறித்து பிரிட்டன் வெளியுறவு அமைச்சகமும் சி.ஐ.ஏ.யும் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டன. (ஸ்ரீ-2)

# தரமற்ற பெற்றோல் சிங்கப்பூரிலுள்ள டுபாய் நிறுவனத்திலிருந்தே இறக்குமதி

## அரசாங்கம் தெரிவிப்பு; டுபாய் நிறுவனம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் தரமற்ற பெற்றோலை சந்தைக்கு விட்டமை தொடர்பில் தற்போது அரசாங்கம் பாரிய பிரச்சினைக்கு முகங் கொடுத்து கொண்டிருக்கிறது.

இந்த தரமற்ற பெற்றோல் சிங்கப்பூரில் உள்ள டுபாய் நிறுவனம் ஒன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இலங்கை அரசாங்கம் கூறிவருகிறது.

எனினும் ஈ.என்.ஓ.சி.என்ற குறித்த டுபாய் நிறுவனம் இலங்கையின் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நியமனங்களுக்கேற்பவே தமது நிறுவனம் பெற்றோலை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ததாக அந்த நிறுவனத்தின் சிங்கப்பூர் கிளை அதிகாரி ஜேர்மி சியா தெரிவித்துள்ளார்.

எனவே, இலங்கை அரசாங்கம் தம்மிடம் நட்டஈட்டை கோருமானால் எவ்வித நட்ட ஈட்டையும் வழங்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பெற்றோல் டுபாய் நிறுவனத்திடம் இருந்து கடன் அடிப்படையிலேயே பெறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த கடனை மீளச் செலுத்துவதில் எவ்வித தாமதமும் காட்டப் படமாட்டாது என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் குறித்த தரமற்ற பெற்றோல் இறக்குமதி விடய குற்றச்சாட்டு தொடர்பில் பெற்றோலிய திணைக்கள தலைவர் ஹரி ஜெயவர்த்தனவை பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அவர் பலமான அரசியல் பின்னணியை கொண்டிருப்பதால் அது கைகூடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# காலிமுகத்திடலின் முன்னாலுள்ள காணி சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு

(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடலின் முன்னால் உள்ள சுமார் 7 ஏக்கர் நிலத்தை 99 வருட குத்தகைக்கு வழங்க இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

சீனாவின் சி.ஏ.டி.ஐ.சி.என்ற விமான தொழில் நுட்ப நிறுவனத்துக்கு இந்தக் காணித்தொகுதி வழங்கப்படவுள்ளது.

முன்னதாக இந்த காணி 125 மில்லியன் டொலருக்கு அதாவது 13.7 பில்லியன் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்படவிருந்தது.

எனினும் அதற்கு எதிர்ப்பு ஏற்படவே தீர்மானம் கைவிடப்பட்டது. தற்போது அதனை 99 வருட குத்தகைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் புதிய குத்தகை தீர்மானம் சீன நிறுவனம் தான் ஏற்கனவே வழங்கிய பணத்தை திரும்பக் கேட்டதனால் ஏற்பட்ட ஒன்றா? என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

ஏற்கனவே இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த இடத்தின் நிலம் ஹொங்கொங்கின் சங்ரி-லா ஹோட்டல் நிறுவனத்துக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் மற்றும் வியாபாரத்தொகுதி என்பவற்றுக்காக விற்பனை செய்யப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தற்போது சீனாவின் சி.ஏ.டி.ஐ.சி.நிறுவனத்துக்கு குறித்த காணிக்கு அருகிலுள்ள 7 ஏக்கர் காணி 99 வருட குத்தகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வி.எவ்.எம்.இயக்குநர் மீது தாக்குதல்; மேலுமொரு சந்தேகநபர் கைது

(கொழும்பு)

வி.எவ்.எம்.வானொலி சேவையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ருவன் சுகததாஸ மீதான தாக்குதல் தொடர்பாக மேலும் ஒரு சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைய இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி டப்ளியூ. டபிள்யூ. சி.ஆர்.விஜேரத்னவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது நுகேகொடை பகுதி வீடொன்றில் வைத்து சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டார்.

இதற்கமைய மூன்று சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் ஆறாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு காரியாலயத்திலிருந்து பொரலஸ்கமுவ கங்காராம பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுக்கு திரும்பிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வி.எப்.எம்.வானொலி சேவையின் முகாமைத்துவப் பணிப்பாளர் ருவன் சுகததாஸ மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு விசேட நடவடிக்கை

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முறியடிக்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகம் தலைமையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கௌதமாலா, மெக்சிக்கோ, உருகுவே, இலத்தின் அமெரிக்கா நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.

ஸ்பானிய மொழியில் பாண்டித்தியம் கொண்ட தமரா, புலிகளுக்கு சொந்தமான ஆயுதங்கள் தொடர்பான இரகசியத் தகவல்களையும் அம்பலப்படுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# மருந்தகங்களில் குளிரூட்டிகள் பொருத்தப்படவேண்டியது கட்டாயம்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மருந்து வகைகளின் பாதுகாப்பு தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மருந்தகங்களில் குளிரூட்டிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதை கட்டாயமாக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குறிப்பாக மருந்து வகைகளை 24 பாகை செல்சியசுக்கு குறைவான வெப்பநிலையின் கீழ் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டியது கட்டாயம் என சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இயற்கை வெப்பநிலைக்கு அமைய நுவரேலியா மாவட்டத்தில் மாத்திரமே குளிரூட்டிகள் பயன்படுத்தாமல் மருந்து வகைகளை களஞ்சியப்படுத்த முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வழமையான வெப்பநிலை 24 பாகைக்கு அதிகமாகவே அமைந்துள்ளது. அதிக வெப்பத்தில் மருந்து வகைகளை களஞ்சியப்படுத்தி வைப்பதால் அதில் இரசாயன மாற்றம் ஏற்படுவதாகவும் சில சந்தர்ப்பங்களில் மருந்துகள் விஷமாவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு அனைத்து மருந்தகங்களிலும் குளிரூட்டி இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அந்த வசதியில்லாத மருந்தகங்களுக்கு அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்காதிருக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள மருந்தகங்களுக்கு குளிரூட்டிகளை பொருத்துவதற்கு ஆறுமாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதோடு அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும்போது குளிரூட்டிகள் இருக்கின்றனவா என்பது ஆராயப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு விசேட திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

இதற்கமைய கடற்றொழிலாளர்களின் நலன்கருதி விசேட படகுச் சேவையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் இந்த படகுகளின் ஊடாக கொள்வனவு செய்யப்படவுள்ளதுடன் மீனவர்களுக்குத் தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதற்கட்டத்தில் இத்தகைய எட்டு படகுகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

union assurance
Trust in your tomorrow, today.

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான
யூனியன் அஷ்யூரன்ஸ் PLC யின்
யாழ்ப்பாணக் கிளைக்கான
A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான
வேலைவாய்ப்பு

வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா?
தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் அடையும் நன்மைகள்

- அதி உயர் வருமானம் உழைக்கும் வசதி
- ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டுச் சுற்றுலாவசதி
- வீடமைப்புக் கடன் வசதி
- மோட்டார் சைக்கிள்/கார் போன்ற வாகன வசதிகள்
- ஒவ்வொரு வருடமும் தங்கப்பதக்கங்களை வெல்லும் அரியவாய்ப்பு
- உயர்தர அறிவுசார் பயிற்சி நெறிகள்


Note:- "விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை"

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் PLC
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் :- 07.09.2011 புதன்கிழமை
நேரம் :- 9.30 மணி

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
K.P.JEGAN - 077 9116282
A.RAJEEVAN - 077 3670322

(சி-4319)





மக்கள் வங்கியின் பொன்விழா அண்மையில் வல்வெட்டித்துறை கிளையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கிளைமுகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன் வங்கி கொடியினை ஏற்றுவதையும், மாகாண பிரதி கல்வி பணிப்பாளர் யோ.ரவீந்திரனுக்கு நினைவுச்சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-வல்வெட்டித்துறை செய்தியாளர்)

## தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவியை துறந்தவர்கள் சிக்கலில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது பதவியினை இராஜினாமா செய்த ஆறு அரசாங்க சேவையாளர்கள் தற்போது பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரு உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் பொருட்டு தமது அரசாங்க பதவியை இராஜினாமா செய்தவர்களே இவ்வாறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில் இறுதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த அரசாங்க சேவையாளர்கள் ஆறு பேரும் தமது பதவியில் இருந்து விலகியுள்ளனர்.

தற்போது இவர்கள் தமது பதவிகளை இழந்துள்ளதுடன் தேர்தலில் போட்டியிடவும் முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த ஆறு பேரின் விடயங்களை சுமுகமாகத் தீர்த்து வைக்கும்படி மாவட்ட அரசாங்க அதிபருக்கு தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## பொதுவான மீன்பிடி வலயம் குறித்து இலங்கை-இந்திய அதிகாரிகள் ஆராய்வு

(கொழும்பு)

பொதுவான மீன்பிடி வலயமொன்றை அறிவிப்பது குறித்து இலங்கை மற்றும் இந்திய அதிகாரிகள் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு மீன்பிடி வலயமொன்றை அறிவிப்பது குறித்து இரு நாட்டு அரசாங்கங்களும் ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மீனவர்கள் அத்துமீறி கடற்பிரதேசங்களில் பிரவேசிப்பதனால் இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட காலமாக முரண்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னார், கற்பிட்டி, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய கடற்பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்து காணப்படுவதாக தேசிய மீனவர் அமைப்பின் அழைப்பாளர் ஹேர்மன் குமார தெரிவித்துள்ளார்.

இதுவரையில் இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## கடமை நேரத்தில் மதுபோதையிலிருந்த நால்வர் பொலிஸாரால் கைது

கடமை நேரத்தில் மதுபோதையில் இருந்த பரீட்சை நிலைய பொறுப் பதிகாரி உட்பட நான்கு பேர் மாத்தறை பிரதேசத்தில் கைது செய்யப்ப ட்டுள்ளனர். மாத்தறை கல்வி வலயத்தில் பரீட்சை தொடர்பாடல் மத்திய நிலையமாக பயன்படுத்தப்பட்ட பாடசாலை ஒன்றில் வைத்தே இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் காவலாளி, பொலிஸ் சார்ஜன் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## அமைச்சர்கள் தன்மானத்தை இழந்து உள்ளனர்



### பொன்சேகா சாடல்

(கொழும்பு)

18 ஆவது அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்கியதன் மூலம் அமைச்சர்கள் தன்மானத்தை இழந்துள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையால் நாட்டின் கௌரவத்தையும் மக்களின் கௌரவத்தையும் இழக்க நேரிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள உபாதைக்கு உடற்கூற்று சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட போதே அவர் நேற்று இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

மக்களுக்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட எண்ணியுள்ளதாக தெரிவித்த அவர் அழகானதொரு நாட்டை உருவாக்கிக் கொடுப்பதாகவும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு 14 பாடங்களுக்குரிய ஆசிரிய ஆலோசகர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் தமிழ், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், கிறிஸ்தவம், நடனம், சித்திரம், விவசாயம், மனையியல், வர்த்தகம், முறைசாராக் கல்வி, 2ஆம் மொழி, சிங்களம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இப்பாடங்களுக்கு ஆசிரியர் தரம் I அல்லது ஆசிரியர் தரம் 2-II உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பட்டதாரிகளாயின் டிப்ளோமா கல்வியை நிறைவு செய்திருப்பதோடு ஆசிரியர் சேவையில் 7 வருடங்கள் பூர்த்தி செய்தவராகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயின் 10 வருட ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

இதில் விண்ணப்பப் படிவங்களை துணுக்காய் கல்வி வலயத்தில் அலுவலக நேரங்களில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளரூடாக வடக்கு மாகாணகல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேற்படி பாடங்களுக்கு துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஏனைய கல்வி வலயத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுமென துணுக்காய் கல்வி வலய கல்விமுகாமைத்துவபிரதிக்கல்விப்பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (05.09.2011)
WOLVERHAMPTON LONDON
பல்கலைக்கழகத்தில் நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும்
Mr. ஏபிரகாம் செல்வராஜ்
Bachelor of Science With Honours
Quantity Surveying
அவர்களை மேன்மேலும் பட்டங்கள் பெற்று
சிறப்போடு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஏபிரகாம் நாகேஸ்வரி
ஜெயராஜ் ஜெயந்திமாலா
சிவானந்தன் சாந்தினி
உதயகுமார் இராஜேஸ்வரி
ஏபிரகாம் மல்லிகா
வனராஜ் சசிராஜ்

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(0909)


## ஜே.வி.பி.கட்சிக்குள் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

தென்னிலங்கையின் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாகக் கருதப்படும் ஜே.வி.பிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடிப்படைவாத கொள்கைகளை உடையவர்களுக்கும் மிதமான கொள்கைகளை உடையவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ரில்வின் சில்வா, கே.டி.லால்காந்த மற்றும் அநுரகுமார போன்றவர்களுக்கும் மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் வாழும் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் ஒத்துழைப்புடன் அடிப்படைக் கொள்கைகளை உடைய நால்வர் புதிய அரசியல் சபையொன்றை நிறுவ முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

எனினும் கட்சிக்குள் நிலவும் கருத்து முரண்பாடுகளுக்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. (ஸ்ரீ-2)

சமய அனுஷ்டானத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவது மனிதனிடம் அன்பும் மரியாதையும் செய்தலே. -அனடோல் பிரான்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சமயத் துறவியை சங்காரம் செய்ய இறைவன் கட்டளையிட்டது ஏன்?

ஒரு நாட்டில் மிகப் பெரிய குழப்பம் நடந்து கொண்டிருக்கிறது. எங்கும் அடிதடி, அட்டூழியம், அநியாயம்.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத இறைவன் ஒரு நாள் தனது தூதர்களை அழைத்து குறித்த நாட்டை சங்காரம் செய்யுமாறு கட்டளையிட்டார்.

இறைவனின் கட்டளையை ஏற்றுக் கொண்ட தூதர்கள் அந்த நாட்டுக்கு வந்து இறைவனின் கட்டளையை அமுல்படுத்த தயாரானார்கள்.

அப்போது வழிபாட்டு தலமொன்றில் ஒருவர் இறைவனை நினைத்துக் கொண்டே இருந்தார்.

அறிவுஞானமும் அவரிடம் இருந்தது. ஆனால் அவர் மௌனமாகவே இருந்தார்.

அவரை கண்ணுற்ற இறைதூதர்கள் இவரையும் சங்கரிப்பதா? என்று ஏங்கிப் போனார்கள்.

சிலவேளை இறைவன் இவரைத் தவிர்த்து அந்த நாட்டை சங்காரம் செய்யுமாறு கூறியிருப்பாரோ!

இப்படிச் சந்தேகம் ஏற்பட தூதர்கள் உடனடியாகவே இறைவனைச் சென்று சந்தித்து, சுவாமி! தங்கள் பணிப்பிற்கு அமைய குறித்த நாட்டிற்குச் சென்றோம். ஆனால் அங்கு சமயத் துறவி ஒருவர் மௌனமாக இருக்கிறார். அவரையுமா சங்காரம் செய்வது என்று கேட்டார்கள்.

அதற்கு இறைவன், அவரைத்தான் முதலில் சங்காரம் செய்யுங்கள் எனக் கட்டளை இட்டார்.

இறைவனின் கட்டளைக்கு தூதுவர்கள் பணிந்தார்களாயினும் சமயத் துறவியை சங்காரம் செய்வதற்கான விளக்கத்தை அறியும் ஆவல் உடையவர்களாக இருந்தமையால் இறைவன் விளக்கம் கொடுத்தார்.

தூதர்களே! அநீதி நடக்கும் போது மௌனமாக இருத்தல் என்பது மிகப்பெரும் பாவச் செயல். குழப்பத்தை ஏற்படுத்துகின்றவர்களுக்கு அறத்தை உபதேசிக்க வேண்டும், உண்மையைச் சொல்ல வேண்டும், அவர்களை நல்ல பாதைக்கு திசை திருப்ப வேண்டும்.

ஆனால், அந்த நாட்டில் இவ்வளவு குழப்பம் ஏற்பட்டுக் கொண்டிருந்த போதிலும் குறித்த சமயத் துறவி எதுவும் தெரியாதவராக எதைப் பற்றியும் உணராதவராக இருக்கின்றார்.


இறைவனை மட்டுமே தியானித்துக் கொண்டிருப்பது ஒரு சமயத் துறவியின் பணியாகாது. நீதியை எடுத்துரைப்பது, நல்லாட்சிக்கு வழி வகுப்பது, மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு உதவுவது இவை எல்லாம் சமயத் துறவிகள் இறைவனின் பெயரால் செய்ய வேண்டிய முக்கியமான பணிகள்.

ஆனால், சம்பந்தப்பட்ட சமயத் துறவியோ நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் மௌனமாகவே இருக்கின்றார். ஆகையால் அவரை முதலில் சங்காரம் செய்யுங்கள் என்று இறைவன் விளக்கம் கூற, தூதர்கள் தம் பணியைச் செய்தார்களாம்.

அட! இந்தக் கதையை வாசிக்கும் போது எங்கட நாட்டு நிலைமைக்கு இறைவன் நடவடிக்கை எடுத்தால் எப்படி இருக்கும்?

# அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும்

## நீதியமைச்சரிடம் மன்னார் ஆயர் வலியுறுத்தல்



(கொழும்பு)

கைது செய்யப்பட்ட நிலையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கையினை நீதி அமைச்சு முன்னெடுப்பதோடு நாட்டில் புதிதாக கிளம்பியிருக்கும் கிறிஸ் பூதம் எனும் பெயரிலான நடவடிக்கைகளை கண்டறிந்து அதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளையும் உடன் எடுக்க வேண்டும் என நீதி அமைச்சரை கோரியிருப்பதாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சரை சந்தித்திருப்பதன் முக்கியத்துவம் குறித்து கேட்டபோதே மன்னார் மறைமாவட்ட ஆயர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமை கொழும்பில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் ஆயர் சந்தித்த போதே இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா சிறைச்சாலையில் நான்கு பேர் உண்ணாவிரதம் இருந்தனர். அவர்களுடன் சேர்ந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்.சிலர் உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களைப் பார்வையிட நான் சென்றிருந்தேன்.

இதன்போது சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பாயிருக்கின்ற உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர். அப்போது உண்ணாவிரதிகள் எம்மிடம் தெரிவித்ததாவது, நாங்கள் இங்கு வந்தோம் எங்களைப் பிடித்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் எங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் முன்வைத்து இதுவரை வழக்கு தொடரப்படவில்லை. என்னகாரணத்திற்காக எங்களைக் கைது செய்தார்கள் என்பது தொடர்பாக நீதமன்றத்தில் வழக்கு இன்னமும் தொடரவில்லை.

எனினும் எங்களைக் கைது செய்த தற்குரிய காரணங்களெல்லாம் சட்டமா அதிபருடைய காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டு இருப்பதாக தெரிவிக்கின்றார்கள். ஆனால் அங்கிருந்து இன்னமும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படவில்லை என்றார்கள்.

இதனை உடனடியாகச் செய்ய வேண்டும்.இதுதான் அவர்களுடைய நியாயமான கோரிக்கையாக இருக்கின்றது. எனவேதான் இந்த கோரிக்கை தொடர்பாக நான் நீதி அமைச்சருடன் பேசியிருந்தேன். அவர் எனக்கு நல்ல தொரு சமிக்ஞையினை தந்திருந்தார். இவர்களுடைய வழக்குகள் எல்லாவற்றையும் நாங்கள் உடனடியாக கவனத்தில் எடுப்போம். ஆகவே அவர்களின் உண்ணாவிரதத்தை உடனடியாக கைவிடும்படி கேட்டிருந்தார். அதன் அடிப்படையில் அவர்களது உண்ணாவிரதத்தை நான் நிறுத்தியிருந்தேன்.

இந்நிலையிலேயே இறுதியாக இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது கைதிகளின் முழு விபரங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். மேலும் கிறிஸ் பூதங்கள் மாமனிதன் தொடர்பாக நான் அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளேன்.

பாதுகாப்புத்தரப்பினர் மக்களுடன் இணைந்து செயற்பட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வராதமை பெரிய தொரு துரதிஷ்டவசமான ஒரு நிகழ்வாக இருக்கின்றது. நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்பார்க்கவில்லை. அதுவும் இந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருக்கும் வேளையில் இவ்வாறு நடைபெறுகின்றதை நினைத்து மக்களுடைய மனங்கள் எல்லாம் குழம்பிப் போய் இருக்கின்றன என்பதையும் அவருக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றேன் என்றார். (ஸ்ரீ-2)

# புலமைப்பரிசில் பெறுபேறு இம்மாத இறுதியில் வெளியீடு

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு களை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கு உத்தேசித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க கூறியுள்ளார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 401 மாணவர்கள் தோற்றி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் ஐ.தே.க., த.தே.கூ.பங்கேற்கும்

## அரசாங்கம் நம்பிக்கை

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வை காணும் நோக்கில் அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய கட்சியும் கலந்து கொள்ளும் என்று நம்புகின்றோம்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக யதார்த்த ரீதியான தீர்வை எட்ட முடியும் என்பதே எமது எண்ணமாகும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இனப்பிரச்சினைக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வுத்திட்டம் ஒன்றை காண வேண்டும் என்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக் கின்றது.

அதன் காரணமாகவே, தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கில் பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை சபாநாயகர் விரைவில் தெரிவுக் குழுவை நியமிப்பார்.

இதேவேளை பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பாராளுமன்றத்தை பிரதிநிதித் துப்படுத்தும் அனைத்து கட்சிகளும் இடம் பெறும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய கட்சியும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு தீர்வுத்திட்டம் தொடர்பான தங்கள் யோசனைகளையும் பங்களிப்பையும் வழங்கும் என்று நம்புகின்றோம் என்றார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## எழுமின்! விழிமின்



இந்த வாழ்க்கையில் என்ன இருக்கிறது? நாமெல்லாம் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள், இந்துக்கள். எனவே ஆன்மா அழியாதது; நித்தியமானது என்ற நம்பிக்கை நம் இரத்தத்தோடு, உடலோடு ஊறிக் கிடக்கிறது.சில சமயங்களில், என்னிடம் வரும் இளைஞர்கள் நாத்திகவாதம் பேசுகிறார்கள். இந்து ஒருவன் நாத்திகனாக இருக்க முடியும் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. நான் நம்ப மறுக்கிறேன்.

அவன் மேற்கத்தேய நாடுகளின் நூல்களைக் கற்கலாம். கற்றதன் பயனாக உலக வாழ்க்கையில் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் இவையெல்லாம் தற்காலிகமானவை. அவன் இரத்தத்தில் ஊறியவை அல்ல. உன் உடலுக்கு ஒத்துக்கொள்ளாததை, உன் இயல்பிற்கு முரணானதை நல்லது என்று நீ எப்படி ஏற்க முடியும்? அது வீண்வேலையே தவிர வேறன்று. எனவே அவற்றை அரிதில் முயன்று தேட வேண்டாம். நானும் ஒரு காலத்தில் மிகச் சிறுவனாக இருந்த போது இப்படித்தான் முயன்றேன். ஆனால் அப்படி இருக்க இயலாது என்பதை இப்போது உணர்கிறேன்.

# இந்திய பிரதமர், அமைச்சர்களின் சொத்து விபரங்கள் வெளியீடு

இந்தியாவில் அமைச்சர்களின் சொத்து விபரங்கள் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளன. அனைத்து அமைச்சர்களின் சொத்து விபரங்களும் பிரதமர் அலுவலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

பிரதமர் மன்மோகன் சிங்கின் சொத்து மதிப்பு சுமார் 5 கோடி. அதில் வங்கி வைப்பு, இரண்டு வீடுகள் மற்றும் மாருதி கார் ஆகியவை அடங்கும். அவருக்கு நிலம் ஏதும் இல்லை என்றும் சண்டிகரில் வீடு ஒன்று 90 இலட்சம் மதிப்பில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. டில்லியிலும் 88 இலட்சத்தில் ஒரு வீடு உள்ளது. வங்கிகளில் சுமார் 3 இலட்சம் வைப்பு வைத்திருக்கிறார்.

பிரதமரின் மனைவி குருஷரன் கவுர் வங்கியில் 11 இலட்சம் வைப்பு வைத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நகர்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் கமல்நாத்துக்குத்தான் அதிக அளவு சொத்து இருக்கிறது. அவரது சொத்து மதிப்பு 263 கோடி. பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே அன்ரனிக்கு மனைவியுடன் சேர்த்து சொத்து மதிப்பு 39 இலட்சம்.

நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் சொத்து மதிப்பு 1.25 கோடி அதில் கொல்கத்தா மற்றும் டில்லியில் உள்ள குடியிருப்புக்களும் அடங்கும். பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் வீரப்பமொய்லிக்கு 13 இலட்சம் மட்டுமே சொத்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் சிதம்பரம் மற்றும் அவரது மனைவி இருவரும் 23 கோடி ரூபாய் சொத்து வைத்திருக்கிறார்கள். அதில் சிதம்பரத்தின் பங்கு மட்டும் 11 கோடி. அதில் வங்கி வைப்பு 1.29 கோடியும் அடங் கும்.

சிதம்பரத்தின் அசையாச்சொத்துக்கள் வரிசையில் 28 இலட்சம் மதிப்பில் குடகு பகுதியில் கோப்பி எஸ்டேட்டும் உள்ளது. மூன்று கார்கள், ஒருமோட்டார் சைக்கிளுடன் ஆயிரத்து 239 ரூபாய் மதிப்புள்ள ஒரு சைக்கிளும் தனக்கு சொந்தமானதாக சிதம்பரம் அறிவித்திருக்கிறார். சிதம்பரத்திடம் இருக்கும் ஆபரணங்கள் 65 ஆயிரம் ரூபாய். அவரது மனைவியிடம் இருக்கும் ஆபரணங்கள் 7 இலட்சம்.



வேளாண்துறை அமைச்சரும் மகாராஷ்டிர மாநிலத்தில் பெருமளவில் சொத்துக்களை வைத்திருப்பவருமான சரத்பவாரின் சொத்து மதிப்பு 12 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே வாசனுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிலங்கள், தங்கம் 7 இலட்சம், வங்கிவைப்பு 18 இலட்சம் இருப்பதாகக் கூறியுள்ளார். அவரது மனைவிக்கு 32 இலட்சம் மதிப்புள்ள தங்கம், வைரம், வெள்ளி ஆபரணங்கள் உள்ளன.

மத்திய அமைச்சரும் தி.மு.க தலைவர் கருணாநிதியின் மகனுமான மு.க அழகிரி 3 கோடிக்கு மேல் மதிப்புள்ள நிலம், 7 கோடிக்கு மேற்பட்ட பணம், இரண்டு கார்கள் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தங்கம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

அவரது மனைவிக்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நிலங்கள், வங்கி வைப்பு பணம் உள்ளிட்ட 3.5 கோடி உள்ளன. 75 இலட்சத்தில் ஒரு கார் 11 இலட்சத்தில் தங்கம், 1.8 கோடிக்கு வைரம் உள்ளிட்ட ஆபரணங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங் அமைச்சரவையில் உள்ள 77 அமைச்சர்களில் ஜெயந்தி நடராஜன், தி.மு.கவை சேர்ந்த ஜகட்ரட்சகன் உட்பட ஐந்து அமைச்சர்களின் சொத்து விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. (ஸ்ரீ-2)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி டில்லியில் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

இலங்கை தமிழர்களுக்கு சம அந்தஸ்து, சம உரிமை, மாநில சுயாட்சி அதிகாரம் உள்ளடக்கிய அரசியல் தீர்வு காண வலியுறுத்தியும் மறுவாழ்வு நடவடிக்கையை உறுதி செய்திடவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் நாளை மறுதினம் டில்லியில் பாராளுமன்றத்தின் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத், சீத்தாராம் யெச்சூரி, ஜி.ராமகிருஷ்ணன், எம்.பி.க்கள் கே.ரங்கராஜன், பி.ஆர். நடராஜன், அ.சவுந்தரராஜன், எம்.எல்.ஏ உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# ஜெயலலிதாவின் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பெண் கைது

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த இளம் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த இரு தினங்களுக்கு முன் திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் வைத்தியசாலை வளாகத்தில் செயற்பட்டு வரும் 108 அம்புலன்ஸ் சேவை தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் தலைமை அலுவலகம் மற்றும் முதல்வர் ஜெயலலிதா வீட்டில் குண்டு வைத்திருக்கிறேன் என்று கூறி தொடர்பை துண்டித்தார்.

இது தொடர்பாக திருவல்லிக்கேணி பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வந்தனர். மிரட்டல் விடுக்கப்பட்ட கைத் தொலைபேசி குறித்த விசாரணையில் மறைமலை நகரைச் சேர்ந்த அருள்தாஸ் என்பவரது சிம்அட்டை என்பது தெரிந்தது. பொலிஸார் மறைமலை நகர் கண்ணதாசன் தெருவை சேர்ந்த அருள்தாசைப் பிடித்து விசாரித்தனர். அப்போது கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழும் அவரது மனைவி செந்தமிழ்ச் செல்வி (வயது-33) இந்த எண்ணைப் பயன் படுத்தி வருவது தெரியவந்தது.

ஆசிரியர் பயிற்சி முடித்த செந்தமிழ்ச் செல்வியிடம் பொலிஸார் விசாரித்தனர். கணவர் பிரிந்து சென்றதால் அவர் மீது வெறுப்பில் இருந்த செந்தமிழ்ச்செல்வி பொலிஸில் மாட்டிவிடவே குரலை மாற்றிப் பேசி வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளார். இதையடுத்து செந்தமிழ்ச்செல்வியை பொலிஸார் கைது செய்தனர்.

(ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# ஹசாரேயின் போராட்டத்தால் காங்கிரஸின் செல்வாக்கு சரிவு


(புதுடில்லி)

ஊழலுக்கு எதிராக பலமான லோக்பால் மசோதா கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி சமூகசேவகர் அன்னா ஹசாரே டில்லி ராம்லீலா மைதானத்தில் 12 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இவரது உண்ணாவிரத போராட்டத்துக்கு நாடு முழுவதும் ஆதரவு கிளம்பியது. அன்னா ஹசாரே விவகாரத்தை காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு கையாண்ட விதம் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இது காங்கிரசின் செல்வாக்கை வீழ்ச்சி அடையச் செய்துள்ளது. சந்தை நிலவரங்களை ஆய்வு செய்யும் நீல்சன் நிறுவனம் ஒரு தனியார் தொலைக்காட்சிக்காக பொது மக்களிடையே கருத்து கணிப்பு நடத்தியது. கடந்த மே மாதமும் அன்னா ஹசாரே உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டபின் 2 முறை கருத்து கணிப்பை நடத்தியது.

2 ஆவது முறையின் போது நாடு முழுவதும் 28 நகரங்களில் மொத்த 9 ஆயிரம் பேரிடம் கருத்து கேட்கப்பட்டது. இதில் கண்டறியப்பட்ட விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.




கடந்த மே மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் காங்கிரஸ் கட்சிக்கு 30 சதவீதமும் பாரதீய ஜனதாவுக்கு 23 சதவீதமும் ஆதரவு நிலை காணப்பட்டது.

ஹசாரேயின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பின் காங்கிரசின் செல்வாக்கு சரிந்துள்ளது. பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு அதிகரித்து இருக்கிறது. காங்கிரசின் செல்வாக்கு சரிவு 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பாரதீய ஜனதாவின் ஆதரவு 9 சதவீதம் அதிகரித்துள்ளது. நாளையே தேர்தல் வந்தால் பாரதீய ஜனதா 32 சதவீதம் வாக்குகளைப் பெற்று மத்தியில் ஆட்சியை பிடிக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. (ஸ்ரீ-2)

# ஈழவிடிவு தமிழக முதல்வரின் கைகளில்தான் உள்ளது

## சீமான் தெரிவிப்பு



ஈழவிடிவு என்பது முதல்வர் அம்மாவின் கைகளில்தான் உள்ளது. அவர்தான் தமிழினத்தின் தலைவி என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் இரவு மரியட்டும் மரண தண்டனை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் பெரியார் திராவிட கழகத்தலைவர் கௌத்தூர் மணி, நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் உட்பட பலர் பங்கேற்றனர்.

சீமான் பேசும் போது, தங்கத்தாரகை முதல்வர் அம்மா அவர்கட்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈழத்தமிழருக்கு இதுவரைக்கும் இவரைப் போல் வேறு யாரும் உதவிகளை செய்ததில்லை. மூன்று உயிர்களை எங்களுக்கு காப்பாற்றி தந்துள்ளார். அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கிலாரி கிளின்டன் தமிழகம் வந்திருந்த போது ஒரும்ணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். அதில் 45 நிமிடங்கள் ஈழத் தமிழர்களை பற்றியே பேசிக்கொண்டிருந்தார்.

ஈழ விடிவு என்பது முதல்வர் அம்மாவின் கைகளில் தான் உள்ளது . இந்திராகாந்தியின் பேரன் ராஜீவ்காந்தியின் மகன் என்ற பெயரை தவிர என் தம்பி ராகுல்காந்திக்கு வேறு என்ன தகுதி இருக்கிறது. இந்தியாவின் பிரதமராக ஆசைப்படுவதற்கு கருணாநிதி இந்த மூன்று உயிர்களை காப்பாற்ற வேண்டும் என்று அறிக்கை விடுகிறார். நீ இருக்கும்போது என்ன செய்தாய். இவர்களை காப்பாற்ற முத்துக்குமார் இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி தீக்குளித்து இறந்தபோது, நாங்கள் போராடியபோது, தெருவில் இறங்கி கொடி பிடித்தபோது பொலிசை விட்டு எங்கள் மீது வழக்கு போட்டு எங்களை தடுத்தீர்கள்.

அன்று நீங்கள் எங்களை விட்டிருந்தால் போராட்டம் நடத்தி போரை நிறுத்தியிருப்போம். நீ எங்களை செய்யவிடவில்லை. அதனால் ஆட்சியை இழந்தாய். எங்கள் அம்மா முதல்வரானார். தோழி செங்கொடி தீக்குளித்து இறந்தார்.

இந்த மூன்று உயிர்களை தூக்குதண்டனையில் இருந்து காப்பாற்ற தெருவில் இறங்கி போராடினோம். எங்கள் மீது எந்த வழக்கையும் போடவில்லை. அதற்கு பதில் மூன்று உயிர்களை காப்பாற்றித் தந்துள்ளார். அவர்தான் தமிழினத்தின் தலைவி என்று கூறினார். (ஸ்ரீ-2)

# இந்திய அணியில் கழுதைகள் -நாசர் ஹுஸைன்



இந்திய கிரிக்கெட் அணி வீரர்களைக் கழுதைகள் என இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் ஹுஸைன் கூறியுள்ளார்.


கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இருபது-20 போட்டியின்போது தொலைக்காட்சி வர்ணனையாளராகப் பணியாற்றிய நாசர் ஹுஸைன் இந்த கழுதை விமர்சனத்தைத் தெரிவித்தார்.

இப்போட்டியில் முனாப் பட்டேலின் பந்து வீச்சில் கெவின் பீட்டர்சன் கொடுத்த பிடியை பார்தீவ் பட்டேல் தவறவிட்டார்.

அப்போது வர்ணனை செய்துகொண்டிருந்த நாசர் ஹுஸைன் இரு அணிகளுக்குமிடையிலான வித்தியாசம் களத்தடுப்பு என நான் கூறுவேன். இங்கிலாந்து அணி சகல துறையிலான சிறந்த களத்தடுப்பு அணி. இந்திய அணியில் 3 அல்லது 4 சிறந்த களத்தடுப்பாளர்களும் ஒன்று அல்லது இரண்டு கழுதைகளும் களத்திலுள்ளன என நம்புகின்றேன் என்றார்.

# இந்திய வீரர்கள் கழுதைகளா?

## அசாருதீன் ஆவேசம்



கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இருபது-20 போட்டியில் வர்ணனை செய்துகொண்டிருந்த நாசர் ஹுஸைன் இந்தியா, இங்கிலாந்து அணிகளின் களத்தடுப்பை ஒப்பிட்டால், இங்கிலாந்தின் களத்தடுப்புச் சிறப்பாகவுள்ளது. இந்திய அணியிலும் 3 அல்லது 4 சிறந்த களத்தடுப்பாளர்கள் உள்ளனர். அதேசமயம் 2 கழுதைகளும் களத்தடுப்பில் ஈடுபட்டுள்ளதெனக் குறிப்பிட்டார்.

அவரின் இந்தக் கருத்து இப்போது கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. இது குறித்து முன்னாள் அணித்தலைவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான முஹம்மது அசாருதீன் கூறுகையில்,

நாசர் ஹுஸைனை மன்னிப்புக்கோருமாறு வலியுறுத்த வேண்டும். இங்கிலாந்து அணியின் தலைவராகவிருந்த அவர், இது போன்ற கருத்துகளைத் தெரிவித்திருக்கக் கூடாது. வர்ணணை செய்யப் பல வழிகள் உள்ளன. அப்படியிருக்கையில் முன்னாள் வீரரான நாசர் ஹுஸைன் இதுபோன்று சொல்வது சரியானதல்ல என்றார்.

வர்ணணையாளர் குழுவிலிருந்து நாசர் ஹுஸைன் நீக்கப்படுவாரா என்று கேட்ட போது, அது குறித்துத் தனக்குத் தெரியாது. ஆனால் மன்னிப்புக்கோருமாறு அவரை வலியுறுத்த வேண்டும் என்று அசாருதீன் கூறினார்.

# அறிந்தும் அறியாமலிருந்த...

இணைத்தலைமை நாடுகளிடம் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளின் மீது தொடர்ச்சியாக சில நாட்கள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து வந்த நம்பகமான தகவல்கள் பற்றிய தூதுவரின் கரிசனைகளுக்கு பசில் ராஜபக்ஷ வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவில்லை என்று அமெரிக்க தூதரகத்தால் மார்ச் 5 -ம் திகதி அனுப்பப்பட்ட தகவல் கூறுகிறது.

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கனரக ஆயுதங்கள் பயன் படுத்தப் படுவதை நிறுத்துவதாக சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் மீண்டும் உறுதி வழங்கியிருந்தது.

பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட இடங்களில் இருந்து விடுதலைப்புலிகளால் இலங்கை பாதுகாப்பு படையினர் மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களை எதிர்த்து பாதுகாப்பு படையினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்ததாக பசில் ராஜ பக்ஷ கூறியுள்ளார்.

ஆனால் பதில் தாக்குதலாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் பல பொதுமக்களை கொன்றதாகவும் அத்தகைய தாக்குதல்கள் கனரக ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை என்ற இலங்கை அரசாங்கத்தின் கடப்பாட்டை மீறுவதாக உள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் அவருக்கு சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் அமெரிக்க தூதரகம் வாஷிங்டனுக்கு அனுப்பி இருந்த ஆவணங்கள் கூறுகின்றன.

இந்தத் தகவல்கள் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றி கொள்ளப்பட்டதாக அரசாங்கம் அறிவிப்பதற்கு இரு மாதங்களுக்கு முன்னதாக அனுப்பப்பட்டிருந்தன.

பகிரங்கமாக கூறும் அறிக்கைகளுக்கு மாறாக தாம் கனரக ஆயுதங்களை பயன்படுத்தியதாக இலங்கை அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு கூறியிருந்ததாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவுடனான இரு அண்மைய சந்திப்புக்களின் போது இலங்கைப் படையினர் பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதாக பசில் ராஜபக்ஷ ஒப்புக் கொண் டதாகவும் ஆனால் அந்த விடயத்தை பேசுவதில் அவர் அவ்வளவு விருப்பமில்லாதவராக இருந்தார் என்றும் நோர்வே தூதுவர் கூறியிருக்கிறார்.

ஆனால் மிக மோசமான மனித நேய பேரழிவு குறித்து ஒரு அறிக்கை வெளியிட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தினால் கேட்கப்பட்டதை ஜப்பான், நோர்வே ஆகிய உதவி வழங்கும் நாடுகள் எதிர்த்ததாகவும் பாதுகாப்பு வலயங்கள் மீது தாக்குவதற்கு அப்பால் தமது முன்னைய கரிசனைகள் பலவற்றுக்கு இலங்கை சாதகமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்த நாடுகள் கூறியதாகவும் கூறப்படுகிறது.

2009-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 -ம் திகதி இலங்கைப் படைகள் புதிய பொது மக்கள் பாதுகாப்பு வலயம் ஒன்றை அறிவித் தன. விடுதலைப்புலிகளுடன் சிக்குண்ட பொது மக்களுக்கு மனிதநேய உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு உதவியாகவே பாதுகாப்பு வலயங்கள் அறிவிக்கப் பட்டதாக இராணுவம் கூறியிருந்தது.

2002-ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்கு மத்தியஸ்தம் செய்த நோர்வே, வடக்கில் அகப்பட்டுள்ள மக்களை மீட்பதற்காக தாம் விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் கொடுப்பதாக இணைத்தலைமைநாடுகளுக்கு கூறியிருந்தது.

மேலும் உணவுகளை வழங்குவதற்கான பசில் ராஜபக்ஷவின் நடவடிக்கைகளை அவர்களை விமர்சிக்கும் வகையிலான பகிரங்க அறிக்கைகள் பாதிக்கலாம் என்று நோர்வே வாதிட்டதாக அமெரிக்க தூதரகத்தின் கசிந்த தகவல் கூறியுள்ளது. (ச-8)

# தாள் காசில்...

சைவம்- பௌத்தம் இரண்டையும் வளர்த்தவர்கள். ஜாவாவில் ப்ராம்பானான் என்ற இடத்தில் ஆயிரம் கோயில்கள் இருந்தன. பின்னர் பல ஆட்சிகள் மாறி சுகார்த்தோ ஆட்சிக்கு வந்தபோது இந்தோனேசியா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அப்போது அதற்கு பரிகாரமாக கணேசரின் உருவத்தை நாணயத் தாளில் அச்சிட்டு வெளியிட்டனர். இதற்கு அவர்கள் பயன்படுத்தியது வீரியம் மிக்க பண்டைய ப்ராம்பனான் தாந்திரீக கணேசர். (ச-8)

# யாழ்.-வவுனியா...

வேளை வவுனியா-யாழ். சேவையில் ஈடுபடும் பஸ்ஸூம் தயாராக நின்றுள்ளது.

இந்நிலையில் இருதரப்பினருக்குமிடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்ஸில் இருந்தவர்கள் வவுனியா- யாழ் சேவையில் ஈடுபட்டும் பஸ்ஸின் சாரதியை பிடித்து கடுமையாக தாக்கியுள்ளனர்.

அதன் பின் தமது பஸ்ஸின் பின்புறத்தில் அவரை அடைத்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு சென்றனர்.

அதன்பின் பண்ணை, குளப்பிட்டி, மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதிகளில் வைத்து அச் சாரதியை கடுமையாக தாக்கியுள்ளனர்.அதன் பின் ஆனைக்கோட்டையிலுள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்துள்ளனர்.

எனினும் அங்கிருந்து தப்பிய பிரஸ்தாப சாரதி உடனடியாக புறப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்றுள்ளார். எனினும் அவரை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர் எனக் கூறினர்.

இச்சம்பவத்தினை அடுத்து வவுனியா நகரப்பகுதியில் நேற்றிரவு பதற்றமான சூழ் நிலை காணப்பட்டது.

இதேவேளை சாரதி கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு தெரிந்தவர்கள் எனவும் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்காவிடின் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் வவுனியா பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது. (எ-1)

# நின்றது மின்...

மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் எவரும் உதவிக்கு செல்லவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை, மிருசுவில் பகுதியில் 2 பேர் மர்ம மனிதர்களால் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. நேற்று இரவு 7.30 மணியளவில் மிருசுவில் படித்த மகளிர் குடியிருப்புத் திட்டப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற 4 மர்ம மனிதர்கள் வீட்டுக்குள் உள்ளோரின் பெயரைக்கூறி அழைத்து இருவரைத் தாக்கிவிட்டு தப்பித்துச்சென்றுள்ளனர். இதில் அவ்வீட்டில் வசிக்கும் தந்தை, மகன் ஆகிய இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தப்பிச்சென்ற 4 மர்ம மனிதர்களில் இருவர் மிருசுவில் மன்னன் குறிச்சிப் பிரதேசத்தில் மோட்டார் சைகக்கிளிலிருந்து இறங்கி தலை மறைவானதாகவும் கூறப்படுகிறது.

மேலும் மிருசுவில் பகுதியில் தொடர்ச்சியாக நள்ளிரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல்களை நிகழ்த்திவிட்டு தப்பிச் செல்லும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (ச-9,85)

# மர்ம மனிதர்கள்...

அதனடிப்படையில் பின்வரும் முடிபுகள் எடுக்கப்பட்டன.

குடாநாட்டிலும் மற்றும் வடக்கின் பல்வேறு பகுதிகளிலும், மலையகத்தின் சில இடங்களிலும் மற்றும் புத்தளத்திலும் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து மர்ம மனிதர்களின் செயற்பாடுகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று ஜனாதிபதியை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுப்பது. இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமயத் தலைவர்கள், அறிவுஜீவிகள், அரசியல் நடவடிக்கையாளர்கள் என்போரை உள்ளடக்கிய ஓர் குழு கலந்து கொள்ள வேண்டும்.

நாளைசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற கூட்ட நடவடிக்கைகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு கிழக்கின் குறிப்பாக குடாநாட்டில் இன்றைய நிலைமை தொடர்பாக பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

குடாநாட்டின் இன்றைய நிலைமையில் பொதுமக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை அரசாங்கத்திற்கும் வெளியுலகத்திற்கும் எடுத்துரைக்கும் நோக்குடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை யாழ்.குடாநாட்டில் உள்ள ஓர் ஆலய முன்றலில் எதிர்வரும் 10-ம் திகதி சனிக்கிழமை மேற்கொள்ளுவது போன்ற முடிபுகள் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்திற்கு நல்லை ஆதீன முதல்வர், தென்னிந்திய திருச்சபை பேராயர், பாராளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், என்.சிறிகாந்தா, தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம், சூழவியலாளர் பொ.ஐங்கரநேசன், யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மனிதவுரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.யாழ் மாநகரசபை உறுப்பினர் இரா. சங்கையா வரவேற்புரை நிகழ்த்தினார். (ச-8)

# மர்ம மனிதர்களை...

அல்லோலகல்லோலப்படுகிறது. அத்துடன் மர்ம மனிதன் அட்டகாசத்தால் யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. பெரும் அச்சத்துக்கு மத்தியிலேயே மக்கள் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்த இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துக் கூறிய கட்டளைத் தளபதி மேற்கண்ட தகவலை வழங்கினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இங்கு எவ்வித பதற்றமுமில்லை. கிறீஸ் மனிதனால் ஆதாய பெற முனையும் தரப்பினரே கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இரவுவேளைகளில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கிராம மட்டங்களில் விழிப்புக் குழுக்களை அமைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் என்னுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு கேட்பார். அது மட்டுமன்றி நிலைமைகளைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். மர்ம மனிதனுக்கும் இராணுவத்துக்கும் எந்த வகையிலும் தொடர்பில்லை. இராணுவத் தரப்புக்கு சேறுபூச முனைபவர்களே சம்பவங்களைத் திரிபு படுத்திக் கூறுகின்றனர். மர்ம மனிதன் விவகாரத்தின் பின்னணியில் அரசியல் உள்ளது என நான் கருதுகிறேன் என்று கூறியுள்ளார்.(எ-8)

# தெற்காசியாவை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாத்த பெருமை இலங்கைக்கே!

## ஜனாதிபதி பெருமிதம்



தெற்காசியாவை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாத்து பயங்கரவாதத்தை தோற்கடித்த நாடு என்ற பெருமையுடன் இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான ரொட்றி கழகத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான தெற்காசிய மாநாட்டின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் ரொட்றி கழகத்தின் பல உயர் மட்டத் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இதன் போது ரொட்றி கழகத்தின் தலைவர் கல்யாண் பனீர்ஜியாலினால் நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை தோற்கடித்த தேசம் என்ற வகையிலும் தெற்காசியாவை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாத்துள்ளோம் என்ற வகையிலும் பெருமையடைவதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

ஒரு தசாப்த காலத்திற்கும் அதிகமாக தம்மிடமிருந்த பொருளாதார மற்றும் ஆயுத பலத்தினை தற்போது அதிகம் கொண்டிருந்த போதிலும் கொலைக்களத்தில் சிக்கியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை தோற்கடித்ததாக ஒவ்வொரு தனிநபரும் அமைப்புக்களும் தம்மைச் சுட்டிக்காட்டும் அதே வேளையில் அவர்கள் உண்மையை அறிந்திருக்கவில்லை என்றே தோன்றுவதாக அவர் கூறினார்.

அத்துடன் பயங்கரவாதத்திற்கு எதிரான நீண்டகால மோதல் மற்றும் பயங்கரவாதிகளின் நிலைப்பாடு இதுவாகவே உள்ளது. இலங்கை தொடர்பிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமை தொடர்பிலும் அவர்களுக்கு எவ்வித அக்கறை இல்லை.

பலத்த சிரமங்களுக்கு மத்தியில் நாட்டில் ஸ்திரமான சமாதானத்தை தற்போது நிலைநாட்டியுள்ளோம். மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

இதனைத் தவிர பொறுப்புக்கூற வேண்டிய விடயங்கள் தொடர்பில் தமக்கு எதிராக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகிறது. இவற்றின் பல குண்டுத்தாக்குதல்களில் இடம்பெற்ற பொதுமக்களின் உயிரிழப்புக்கள் தொடர்பானவை.

மனிதாபிமான நடவடிக்கைகளை குழப்புவதன் மூலம் சிறந்த நட்புறவினை கட்டியெழுப்பமுடியுமா என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது கேள்வியெழுப்பினார். (ச-8)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

# முதியவரைத் தாக்கி நகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தனியாக வந்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு நகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த வயோதிபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கட்டப்பிராய் சின்னக்கோவில் தெருவைச் சேர்ந்த செ.சின்னராசா (வயது 68) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

முதியவர் அணிந்திருந்த 2 1/2 பவுண் மோதிரமும் மற்றும் சைக்கிள், அடையாள அட்டை என்பன இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (ச-4)

THE COLLEGE OF CHEMISTRY
DAY CLASSES
ஆரம்பம்: 09/09/2011
3.00 PM
Sat,Sun -9.45 -11.45
Tu,Th -3.00 -4.30
- அலகு ரீதியான மீட்டல்
- கடந்த கால வினா விடை
- மாதிரி வினாக்கள்
- தொடர் பரீட்சை, கருத்தரங்குகள்
- அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
(6063)
DIAS B.Sc(Hons)Spl in Chem
பழம் Rd, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

STUDY IN UK/POLAND
A/L பரீட்சை முடிவடைந்து விட்டதா? அடுத்து உங்கள் தெரிவு என்ன?
உங்கள் வளமான எதிர்காலத்திற்கு வேலைவாய்ப்புடன் கூடிய வெளிநாட்டு கல்வி மூலம் ஒளியூட்டுங்கள்
எம்முடன் நீங்கள் ஏன் இணைய வேண்டும்?
யாழ் மாணவர்களுக்காக யாழில் உள்ளவரால் செய்யப்படும் சேவை
O/L தகைமை போதுமானது...
பல வருடகால அனுபவத்தின் மூலம் சிறப்பான வழிகாட்டல்கள்
"A" தர கல்லூரி, பல்கலைக்கழக அனுமதிகள்
நீங்கள் விரும்பும் பாடநெறிகள்
Management Courses
Law
I.T Courses
Computer Science
English Courses
Nursing Courses
கிறிஸ்தவ மாணவர்களுக்கு
Dip in Christian Music and Worship
Dip in Christian Ministry
Dip in Theology
Bachelor in Theology
Advanced Dip in Theology-Christian ministry
Oct/Nov In take
நாம் பெறும் சகல பணத்திற்கும் அங்கீகாரம் பெற்ற அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும்
போலியான முகவர்களை நம்பி உங்கள் பொன்னான காலத்தையும் பணத்தையும் வீணாக்காதீர்கள்
UK/Poland செல்வதற்கான மொத்தச் செலவு 7 லட்சம் மட்டுமே
ஒரு முறை முயன்று பாருங்கள் இரு மாத காலத்தினுள் UK செல்லலாம்
சரியான முறையில் விண்ணப்பிப்பதன் காரணமாகவே எமது மாணவர்கள் அனைவரும் விசா பெற்றுச் செல்கின்றனர்.
கிறிஸ்தவ மாணவர்கள் இறை ஊழியத்துடன் கூடிய கல்வியினை London இல் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பு
C-4321
Global Vision (PVT) Ltd
247, பலாலி வீதி, கந்தர்மடம்
Reg.No:pv79135
"Try, Try One day You can fly"
தொடர்புகளுக்கு
0778458245
Sana:0776277767

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.